பக்கங்கள் - எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் 2037 புரட்டாதி 23 திங்கட்கிழமை (09.10.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:314

## முகமாலை முன்னரங்கில் நேற்றுக் காலை மோதல்!

கிளிநொச்சி, ஒக்.9

வடக்கில் முகமாலை முன்னரங்கப் பகுதியில் நேற்றுக்காலை அரசுப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் இடம்பெற்றுள்ளது.

பெரும் எடுப்பில் இராணுவத்தினர் நகர்வு முயற்சி ஒன்றை ஆரம்பித்தபோது அப்பகுதியில் மோதல் வெடித்தது என்று புலிகள் கூறுகின்றனர். நேற்றைய மோதல் குறித்து புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் கூறியிருப்பதாவது:-

முகமாலைப் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட முன்நகர்வு முயற்சியை தமிழீழ விடுதலைப் புலிகள் முறியடித்தனர். இம்முறியடிப்புச் சமரில் இராணுவத்தைச் சேர்ந்த ஐந்துபேர் கொல்லப்பட்டுள்ளனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் பாரிய படை நடவடிக்கைக்கு ஆயத்தம் சர்வதேச சமூகம் தலையிட்டு தடுக்கக் கோரிக்கை

### தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அவசர வேண்டுகோள்

கொழும்பு, ஒக்.9

வடக்கில் முகமாலைப் பகுதியில் இருந்து பெரும் படை நடவடிக்கைஒன்றை ஆரம்பிக்க ஆயத்தங்கள் முழு வீச்சில் நடைபெறுவதாக அறிகிறோம். சமாதானப் பேச்சுக்கு ஆயத்தமாகிவரும் நேரத்தில் இப்படி ஒரு படை நடவடிக்கையில் அரசு ஈடு பட முனைவதைச் சர்வதேச சமூகம் தலையிட்டுத் தடுக்க வேண்டும்.

-இவ்வாறுதமிழ்த்தேசியக்கூட்டமைப்பு சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுத் துள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மாவை சேனாதிராசா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

பிரசல்ஸில் கடந்த செப்ரெம்பர் 12ஆம் திகதி நடைபெற்ற இணைத்தலைமை நாடுகள் கூட்டத்துக்குப் பின்னர் ஸ்ரீலங்கா அரசாங்கமும் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒஸ்லோவில் ஒக்ரோபரில் நிபந்தனையற்ற பேச்சுக்குத் தயாராக இருப்பதாகவும்,

(08ஆம் பக்கம் பார்க்க)

# இணைத் தலைமைகளின் தூதுவர்கள் இன்று ஜனாதிபதி மஹிந்தவுடன் பேச்சு

## இராணுவ முனைப்பை அரசு கைவிட்டு அமைதிப் பேச்சைத் தொடர வலியுறுத்துவர்

கொழும்பு, ஒக்ரோபர் 09

**இராணுவ நடவடிக்கைப் போக்கில் முனைப்புக் காட்டுவதை விடுத்து, அமைதிப் பேச்சு முயற்சியில் ஆர்வத்துடன் ஈடுபடுமாறு இலங்கை அரசை வற்புறுத்தும் நோக்கத்துடன் உதவும் நாடுகளின் இணைத்தலைமைகள் நான்கினதும் கொழும்புக்கான தூதுவர்கள் இன்று ஜனாதிபதி மஹிந்த் ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசுகின்றார்கள்.**

இலங்கைக்கு உதவும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டின் இணைத் தலைமைகளான அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, ஐரோப்பியஒன்றியம்ஆகியவற்றின்கொழும்புக்கான தூதுவர்களே இன்று ஜனாதிபதி மஹிந்தவைச் சந்திக்கின்றார்கள்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பதவி தற்சமயம் ஜேர்மனியிடம் உள்ளது. அதனால், கொழும்புக்கான ஜேர்மன் தூதுவர் இன்றைய சந்திப்பின்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் பங்குபற்றுவார்

(08ஆம் பக்கம் பார்க்க)

## பொத்துவிலில் மீண்டும் அதிரடிப்படை

கொழும்பு, ஒக்.9

பொத்துவில் - இரத்தல்குளம் பகுதியில் பத்து முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் அப்பகுதியிலிருந்து வாபஸ் பெறப்பட்டிருந்த விசேட அதிரடிப்படையினர் மீண்டும் அப்பகுதியில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இரத்தல்குளத்தில் பத்து முஸ்லிம்கள் படுகொலையானதற்கு விசேட அதிரடிப் படையினரே காரணமெனக்கூறி - அதிரடிப் படையினரை அங்கிருந்து வாபஸ் பெறுமாறு கேட்டு - அப்பகுதி மக்கள் ஆர்ப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## அரசு-புலிகள் தரப்புகளோடு பேச அகாஷி அடுத்தவாரம் வருகிறார்



கொழும்பு, ஒக். 9

ஜப்பானின் இலங்கைக்கான விசேட தூதர் யசூஷி அகாஷி அடுத்தவாரம் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தூதர் அகாஷி பெரும்பாலும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அல்லது பின்னர் இலங்கைக்கு வருகை தந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும், வன்னியில் விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனையும் சந்திப்பதற்குத் (08ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸ் உயர்குழு விரைவில் ஒஸ்லோ செல்கிறது

### நிலைமையை நோர்வேயிடம் விளக்குவதற்காக

கொழும்பு,ஒக்.9

அமைதிப்பேச்சில்முஸ்லிம்தனித்தரப்பு, நாட்டில்தற்போது நிலவுகின்ற யுத்த சூழல் மற்றும் அரசியல் நிலைமைகள் போன்றவற்றை நோர்வே அரசிற்கு விளக்கிக் கூறுவதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினர் விரைவில் ஒஸ்லோவுக்குச் செல்லவுள்ளனர்.

வடக்கு - கிழக்கு முஸ்லிம்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள்மற்றும்அமைதி முயற்சிகளில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள்

(08ஆம் பக்கம் பார்க்க)

## மகாறம்பைக்குளத்தில் இரு இளைஞர்கள் சுட்டுக் கொலை!

வவுனியா - மகாறம்பைக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இரு இளைஞர்கள் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞர்கள்வவுனியா - புதுக்குளம் என்ற பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

(08ஆம் பக்கம் பார்க்க)

### இன்று திங்கள் தொடக்கம்

## கல்விச் செயற்பாடுகள் தடையின்றி நடைபெற மக்கள் குழு வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக்.9

இன்று திங்கட்கிழமை (ஒக்ரோபர் 9 ஆம் திகதி ) தொடக்கம் பாடசாலைகளுக்குச் செல்வதற்கு எடுக்கப்பட்டிருக்கும் தீர்மானத்தை சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு வரவேற்றுள்ளது.

பல்வேறு கல்விச் செயற்பாடுகளும் தடையின்றி நடைபெற வேண்டும் என்றும் குழு கேட்டுள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. பொதுச் செயலாளராக தென்கொரிய பான்-கி-மூன் தெரிவு

தென்கொரியா,ஒக்.9

ஐ.நா., புதிய பொதுச் செயலராக தென்கொரிய வெளியுறவு அமைச்சர் பான்- கி-மூன் தேர்வுசெய்யப்படுவது உறுதியாகி விட்டது. பாதுகாப்பு கவுன்சிலில் உள்ள 15 உறுப்பினர் நாடுகளும் இன்று ஒரு மனதாக அவரது பெயரை முன் மொழிகின்றன.

ஐ.நா., பொதுச் செயலராக இருக்கும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் புலிகள் பகுதிமீது அதிரடிப்படையினர் ஷெல் வீச்சு

அம்பாறை, ஒக்.9

அம்பாறை, காஞ்சிரங்குடாவில் உள்ள விசேட அதிரடிப்படை முகாமில் இருந்து விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பிரதேசங்கள் மீது நேற்றுப் பிற்பகல் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

பிற்பகல் 3.00 மணிமுதல் கஞ்சிகுடிச்சாறு, விநாயகபுரம், தங்கவேலாயுதபுரம் ஆகிய- புலிகளின் நிர்வாகப் பிரதேசத்தில் உள்ள - கிராமங்களை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதாக விடுதலைப் புலி

(08ஆம் பக்கம் பார்க்க)

## 11 சிப்பாய்களின் சடலங்களை அரசு நேற்று பொறுப்பேற்றது

கொழும்பு, ஒக்.9

வாகரையில் இடம்பெற்ற சண்டையில் உயிரிழந்த இராணுவத்தினரின் 11 சடலங்களையும் விடுதலைப் புலிகளிடமிருந்து அரசு நேற்றுப் பொறுப்பேற்றது.

சடலங்களைப் பொறுப்பேற்பதில் இருந்த இழுபறி நிலைமைக்குப் பின்னர் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு சடலங்களைப் பொறுப்பேற்று இராணுவத்திடம் கையளித்தது.

முன்னதாக இந்த சடலங்களை அரசு பொறுப்பேற்க மறுத்ததால் அவற்றைப் புலிகள் கண்காணிப்புக்குழு முன்னிலை

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சர்வதேச ஊடகவியலாளர் குழு இன்று கொழும்புக்கு வருகிறது!

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு தொடரும் அச்சுறுத்தல் குறித்து விசாரணை நடத்த சர்வதேச ஊடகவியலாளர்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் இன்று திங்கட்கிழமை கொழும்பு வருகை தரவுள்ளனர்.

சர்வதேச ஊடக ஆதரவு இயக்கம், சர்வதேச ஊடக நிறுவனம், சர்வதேச ஊடகவியலாளர்கள் கூட்டமைப்பு, ஐ.நா.வின் யுனெஸ்கோ, சர்வதேச செய்தி பாதுகாப்பு நிறுவனம் ஆகியவற்றின் 5 பிரதிநிதிகள் கொண்ட குழு வருகை தருகிறது.

ஊடகவியலாளர்கள் படுகொலைகள், கருத்துச் சுதந்திரம் மற்றும் தணிக்கை முறை ஆகியவைகள் குறித்து இக்குழுவினர் ஆராய உள்ளனர்.

ஸ்ரீலங்கா ஊடக நிறுவனம், சுதந்திர ஊடக இயக்கம், ஸ்ரீலங்கா ஊடகவியலாளர் கூட்டமைப்பு, ஊடகத் தொழிலாளர்கள் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா தமிழ் ஊடகவியலாளர் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஆகியவற்றின் அழைப்பின் பேரில் சர்வதேச குழுவினர் இங்கு வருகின்றனர்.

இங்கு பல்வேறு ஊடக நிறுவன ஆசிரியர்கள், வெளியீட்டாளர்கள், மூத்த ஊடகவியலாளர்கள், ஊடக செயற்பாட்டாளர்கள், அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் இச்சர்வதேச ஊடகக் குழுவினர் சந்தித்து விவாதிக்க உள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஊடகத்துறை அமைச்சர் அனுரா பிரியதர்சன யாப்பா, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, ஜே.வி.பியின் சோமவன்ச அமரசிங்க ஆகியோரையும் சந்திக்க அனுமதி கோரப்பட்டுள்ளது. கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களையும் இக்குழுவினர் சந்தித்துப் பேசுகின்றனர். (த)

# மட்டு. செங்கலடியில் சூடு; பொலிஸ் அலுவலர் கொலை!

ஏறாவூர், ஒக்.9

ஏறாவூர் - செங்கலடி பொலிஸ் காவல் நிலையத்தில் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின்போது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் காலை 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது. 45 வயதான எம். சந்திரசிறி என்ற பொலிஸ் உத்தியோகத்தரே இதில் கொல்லப்பட்டுள்ளார் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலையுண்ட பொலிஸ் உத்தியோகத்தரின் சடலம் ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தையடுத்து பொலிஸார் பதில் தாக்குதலை மேற்கொண்ட போதிலும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான நெடுஞ்சாலையில் சிறிது நேரம் போக்குவரத்துத் தடை ஏற்பட்ட போதிலும், பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது. (த)

# மத்திய வங்கியின் குற்றச்சாட்டுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மறுப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதி வைப்புகள் தொடர்பாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டை புனர்வாழ்வுக் கழகம் மறுத்திருக்கின்றது.

இது தொடர்பாக புனர்வாழ்வுக் கழகத்தின் ஆலோசகர் அர்ஜுன் எதிர்வீரசிங்கம் கூறியிருப்பதாவது:-

ஸ்ரீலங்கா மத்திய வங்கி தெரிவித்திருப்பதுபோல நாம் 400 கோடி ரூபா தொகையை பல்வேறு அமைப்புகளிடமிருந்து பெற்றிருந்தோம். ஆனால், அந்தத் தொகையானது ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு திட்டப் பணிகளுக்குச் செலவிடப்பட்டுள்ளது. ஆழிப்பேரலை மீளமைப்புத் திட்டப்பணிகள் 200 கோடி ரூபா மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பான விவரங்களை ஸ்ரீலங்காவின் சமூகசேவைத் திணைக்களத்திடம் நாம் கையளித்துள்ளோம்.

ஸ்ரீலங்கா மத்திய வங்கியின் விசாரணையானது அரசியல் உள்நோக்கம் கொண்டது. மத்திய வங்கியின் ஆளுநரைச் சந்தித்து எமது நிலைப்பாட்டைத் தெரிவிக்க எமது சட்டத்தரணிகள் முயற்சித்தனர். ஆனால், சந்திப்பதற்கான நேரத்தை மத்திய வங்கி ஆளுநர் ஏற்பாடுசெய்யவில்லை. - என்றார் அவர்.

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையில் ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முறையாக மேற்கொள்ளவில்லை என்றும் ஆழிப்பேரலை மீளமைப்புக்காக 4 பில்லியன் ரூபா தொகையைப் பெற்றிருந்ததாகவும் தெரிவித்திருந்தது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதிக்கும், விடுதலைப் புலிகளின் ஆயுதக் கொள்வனவுக்கும் தொடர்பிருப்பதான சந்தேகத்தையும் மத்திய வங்கி எழுப்பியுள்ளது. (த)

# இலங்கைத் தூதர்களின் செயற்பாடுகளை கண்காணித்து வழிப்படுத்த குழு அமைப்பு

கொழும்பு,ஒக்.9

ஸ்ரீலங்காவின் வெளிநாடுகளுக்கான தூதுவர்களின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்காக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இக்குழுவிற்கு ஓய்வு பெற்ற அரச அதிகாரி எம்.டி. டிபீரிஸ் தலைமை வகிப்பார் என்றும் கடந்த மூன்று நாள்கள் நடைபெற்ற 55 தூதுவர்கள் பங்கேற்ற மாநாட்டில் இம்முடிவு மேற் கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னைய வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் காலத்தில் இத்தகைய குழு அமைக்கப்பட்டதாகவும் அது மீள இயக்கப்படுவதாகவும் வெளி விவகார அமைச்சு கூறியுள்ளது.

அண்மையில் கூட்டப்பட்ட 55 நாடுகளின் தூதுவர்கள் மாநாட்டில் தூதுவர்களின் செயற்பாடுகள் குறித்து மஹிந்த ராஜபக்ஷ கடும் அதிருப்தியையும், விரக்தியையும் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# தொண்டர் ஆசிரியரை புதிதாக நியமனம் செய்ய வேண்டாம்!

## வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் அறிவுறுத்து

திருகோணமலை,ஒக்.9

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் எந்தவொரு பாடசாலையிலும் தொண்டர் ஆசிரியர்களைப் புதிதாக நியமனம் செய்ய வேண்டாம் என்று மாகாண கல்வித்திணைக்களம் சகல பாடசாலை அதிபர்களையும் கேட்டுள்ளது.

மாகாண ஆளுநரின் கடுமையான அறிவுறுத்தலுக்கு அமைவாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் - மாகாண கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த அறிவுறுத்தலுக்கு அமைவாக நடக்காத அதிபர்கள்மீது கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளில் தற்போது கடமையாற்றிவரும் தொண்டர் ஆசிரியர்கள் அனைவருக்கும் நிரந்தர நியமனங்களை வழங்குவதில் பல்வேறு சிக்கல்கள் எதிர்நோக்கப்படுகின்றது.

ஆசிரியர் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்குவதற்குத் தேவையான அடிப்படைக் கல்வித் தகைமை சம்பந்தப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் கொண்டிருக்காமையே இந்தச் சிக்கலுக்குக் காரணம்.

எனினும், ஏற்கனவே சேவையாற்றி வரும் தொண்டர் ஆசிரியர்களின் நன்மை கருதி இவர்களை ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் செய்வதற்கான நடவடிக்கைகளில் மத்திய கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகின்றது - என்று அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (202)

# ஹக்கீமுக்கு எதிராக வழக்கு தொடருவார் அதிரடிப்படை அதிகாரி

கொழும்பு, ஒக்.9

பொத்துவில் - இரத்தல்குளம் பகுதியில் 10 முஸ்லிம்கள் கொல்லப்பட்டமையை அடுத்து பொத்துவில் - சாஸ்திரிவெளி அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி எஸ்.என். குணரத்ன அங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்டார். தான் இடமாற்றம் பெறக் காரணமாக இருந்தவர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எனக் குறிப்பிட்டு அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய குணரத்ன முடிவு செய்திருக்கிறார் எனக் கூறப்படுகின்றது.

10 முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டமைக்கும், தனக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்று தெரிவிக்கும் அவர், தனது இடமாற்றத்துக்குக் காரணமாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் உட்பட ஏனைய சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் இருந்தார்கள் எனக் குறிப்பிட்டு அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் தான் வழக்குத் தாக்கல் செய்யப் போகிறார் என்றும் கூறியிருக்கிறார்.

"முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் கூறுவது போல் இச்சம்பவத்தில் காயமடைந்தவரை விசேட அதிரடிப்படையினர்தான் அம்பாறை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர் என்பது உண்மைக்குப் புறம்பானது. கல்முனையில் உள்ள எந்தவொரு வைத்தியசாலையிலும் சத்திரசிகிச்சை நிபுணர் இல்லாத காரணத்தினாலேயே அவர் அம்பாறை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். இதனையும் எனது மனுவில் குறிப்பிடத் தீர்மானித்திருக்கிறேன்." - என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (த)

# தொண்டுநிறுவனப் பணியாளர்கள் கொலை விசாரணைகள் குறித்து கடுமையான விசனம்

## சர்வதேச விசாரணை கோர முஸ்தீபு

கொழும்பு, ஒக்.9

'அக்ஷன் பாம்' தன்னார்வத் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் 17 பேர் மூதூரில் கொல்லப்பட்டமை தொடர்பான விசாரணைகள் எமக்குத் திருப்தி தரவில்லை என 'அக்ஷன் பாம்' நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் பெனுவா மிரபல் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பி.பி.ஸி. செய்திச் சேவைக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

மூதூரில் எமது தொண்டுநிறுவன ஊழியர்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் கடைப்பிடிக்கப்படும் நடைமுறைகள் திருப்தி தருவனவாக அமையவில்லை.

இத்தகைய நடைமுறைகளுக்கு இலங்கை அரசே பொறுப்பேற்க வேண்டும். சம்பவங்கள் நடந்து இரண்டு மாதங்கள் கடந்த பின்னரும் விசாரணைகள் குறித்த எந்தவித முன்னேற்றமும் தெரியவரவில்லை. விசாரணைகள் பெரும்பாலும் ஒத்திவைக்கப்பட்டே வருகின்றன.

ஏதாவது நடக்கும் என்ற ஆர்வத்தில் நாமும் பார்த்துக்கொண்டே இருக்கின்றோம். இன்னும் ஒரு மாத காலத்துக்குள் இதற்கான உரிய நடைமுறைகள் எடுக்கப்படாதவிடத்து ஐரோப்பிய ஒன்றியம், சர்வதேச விசாரணை அமைப்பு ஆகியவற்றின் மூலமாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கவுள்ளோம் - என்றும் தெரிவித்தார்.(க-12)

# இடைக்குறிச்சி கூட்டுறவுக் கிளை கரம்பைக் குறிச்சியுடன் இணைப்பு

## நிவாரணம் பெறுவதில் இருந்த சிரமம் நீங்கியது

தென்மராட்சிகிழக்கு,ஒக்.9

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இடைக்குறிச்சி கிளை தற்சமயம் கரம்பைக் குறிச் கிளையுடன் இணைக்கப்பட்டு பொருள் விநியோகம் இடம்பெற்றுவருகின்றது.

கடந்த ஓகஸ்ட மாதம் இப்பகுதியில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை மற்றும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தவேளை இடைக்குறிச்சிக் கிளை உடைக்கப்பட்டு பொருள்கள் களவாடப்பட்டமையையடுத்து இந்தக் கிளை நாவற்காடு கிளையுடன் இணைக்கப்பட்டிருந்தது.

நாவற்காடு கிளையில் வரணி வடக்கு கிளையும் இணைக்கப்பட்டமையால், பொது மக்கள் தமது பங்கீட்டுப் பொருள்களைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

இதனையடுத்து தற்போது இடைக்குறிச்சிக் கிளை கரம்பைக் குறிச்சிக் கிளையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து தாம் எதிர்நோக்கிய சிரமம் ஓரளவு குறைந்துள்ளதாக பாவனையாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (122)



வெளிநாடுகளின் இலங்கைத் தூதர்களுக்கான மாநாடு கடந்தவாரம் கொழும்பில் நடந்தது. மாநாட்டின் முடிவில் அலரிமாளிகையில் ஜனாதிபதியைச் சந்தித்த தூதர்கள் ஜனாதிபதியுடன் இணைந்து எடுத்துக்கொண்ட படம் இது.

# தென்கிழக்கு பல்கலை கட்டடத்தில் தீ!

கொழும்பு, ஒக்.9

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டடத்தில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் திடீரென தீப்பற்றிப் பரவியது. இதனால் கணினிகள், மின் உபகரணங்கள் மற்றும் பல்கலைக்கழக ஊழியர்களின் சுயவிவரக்கோவை என்பன முற்றாக எரிந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீ பரவியதற்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை சேதமடைந்த பொருள்களின் மதிப்பும் கணக்கிடப்படவில்லை. அக்கரைபற்று பொலிஸார் இது குறித்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புஷ் அரசின் கொள்கைகளை எதிர்த்து அமெரிக்கா முழுவதும் ஆர்ப்பாட்டம்!

வாஷிங்டன், ஒக்.9

புஷ் அரசின் கொள்கைகள் அனைத்தும் தண்டனைக்குரிய குற்றங்கள் எனக்கூறி அமெரிக்கா முழுவதும் வெள்ளிக்கிழமை ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

உலக சுற்றுச்சூழல் பாதிப்பு, ஈராக் மீது போர் உட்பட புஷ் அரசின் பல்வேறு கொள்கைகள் தண்டனைக்குரிய குற்றங்கள் எனப் பிரசாரம் நடைபெற்று வருகிறது.

''சுற்றுச்சூழல் பாதிப்பைத் தடுக்க உலக நாடுகளின் முடிவுக்கு அமெரிக்கா கட்டுப்பட மறுக்கிறது. ஈராக்கில் அமெரிக்க இராணுவத்தினரும், ஈராக்கியர்களும் ஏராளமானோர் உயிரிழக்கின்றனர். புஷ் நிர்வாகத்தை விரட்டினால்தான் இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க இயலும்'' எனப் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்கா முழுவதும் 200 நகரங்களில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நியூயோர்க் நகரில் ஐ. நா. சபை முன்பிருந்து ஆயிரக்கணக்கானோர் ஊர்வலம் நடத்தினர். அவர்கள் நகரின் முக்கிய வீதிகள் வழியாக வெள்ளை மாளிகையை நெருங்கினர். ஆனால், குறிப்பிட்ட எல்லையில் பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தினர்.

'செப்டெம்பர் 11 ஆம் திகதி தாக்குதல் அம்பலப்படுத்தி விட்டது. போர் ஓய்ந்து விட்டது. புஷ் நிர்வாகத்தை விரட்டவேண்டும். என ஊர்வலத்தினர் முழக்கமிட்டனர்.

''ஆர்ப்பாட்டத்தின் சக்தியை நம்புகிறேன். ஆர்ப்பாட்டங்களை நடத்தித்தான் எங்கள் உரிமைகளைப் பெற்றோம். ஆர்ப்பாட்டம் நடத்தத் தவறினால் நாங்கள் அமெரிக்கர்களாக இருக்க முடியாது'' என 82 வயதுப் பெண்மணி ஒருவர் தெரிவித்தார். (க)

## காஷ்மீரில் இராணுவ வீரர் தலை துண்டித்து படுகொலை

துணை இராணுவ வீரரொருவர், தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு தலைதுண்டிக்கப்பட்ட நிலையில் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் காஷ்மீரில் இடம்பெற்றது.

காஷ்மீரில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள துணை இராணுவப் படை ஒன்றில் பணியாற்றியவர் முகமது சப (வயது-27). காஷ்மீர் பாரமுல்லா மாவட்டத்தில் பராட் சோபோர் எனுமிடத்தில் இவரது வீடு உள்ளது. விடுமுறையில் வீட்டிற்கு வந்திருந்த முக மது சபயை கடந்த வெள்ளியன்று இரவு தீவிர வாதிகள் சிலர் கடத்திச் சென்றனர். இவரை பொலிஸார் தீவிரமாக தேடி வந்த நிலையில், நேற்று முன்தினம் காலை முகமது சபயின் தலையில்லாத முண்டம் மீட்கப்பட்டது. பின்னர் மற்றொரு பகுதியில் துண்டிக்கப்பட்ட அவரது தலை மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (க)

உலக அரங்கில்

## 45 தலிபான்கள் பாகிஸ்தானில் கைது

குவெட்டா, ஒக்.9

ஆப்கானிஸ்தான் எல்லையையொட்டியுள்ள பலுசிஸ்தான் மாகாணத்தில் 45 தலிபான்படையினரை பாகிஸ்தான் பொலிஸார் கைது செய்தனர்.,

கடந்த 24 மணி நேரத்தில் பல்வேறு இடங்களில் நடைபெற்ற தீவிர தேடுதல் வேட்டையின் பலனாக இந்தக் கைதுச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

குவெட்டாவில் பஷ்துதானாபாத் மாவட்டத்தில்30 தலிபான்களும்ஏனையவர்கள் நகருக்கு வெளியேயும் கைதுசெய்யப்பட்டனர்.

பாகிஸ்தான் எல்லையிலிருந்து செயற்படும் கிளர்ச்சியாளர்களையும், தீவிரவாதிகளையும் ஒடுக்கவேண்டும் என்று அமெரிக்கத் தலைமையிலான கூட்டுப்படையினர் பாகிஸ்தானை அண்மையில் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தலிபான் போராளிகள் குவெட்டாவைத் தளமாகப் பயன்படுத்தி எல்லைகடந்த பயங்கரவாதத் தாக்குதலை நடத்துவதாக ஆப்கான் அதிகாரிகள் குற்றம்சாட்டி வருகின்றனர். (க)

# வடகொரியாவின் அணுச்சோதனையைத் தடுப்பதற்கு எங்களால் முடிந்த முயற்சிகளை மேற்கொள்வோம்

## அமெரிக்க அமைச்சர் அறிவிப்பு

வாஷிங்டன்,ஒக்.9

''வடகொரியாவின் அணு ஆயுதச் சோதனையைத் தடுப்பதற்காக எங்களால் முடிந்த எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வோம்''- என்று அமெரிக்க உள்துறை இணை அமைச்சர் கிரிஸ் தெரிவித்துள்ளார்.

வடகொரியா ஏவுகணைச் சோதனை நடத்திவருகிறது. இதனைத் தொடர்ந்து அணு ஆயுதச் சோதனையிலும் இறங்கியுள்ளது. இதற்கு உலக வல்லரசு நாடுகள் இணைந்து கண்டனம் தெரிவித்து வருகின்றன.

அமெரிக்கா அச்சுறுத்துவதாலும், தடை விதிப்பதாலும் அணு ஆயுதச் சோதனை நடத்தவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக வடகொரியா அண்மையில் தெரிவித்திருந்தது. இதனையடுத்து வடகொரியா மீதான அமெரிக்காவின் அச்சுறுத்தல் அதிகரித்துக் கொண்டே வருகின்றது.

இந்தநிலையில், அமெரிக்க உள்துறை இணை அமைச்சர் கிரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறியதாவது:-

''அணு ஆயுதச் சோதனையை வடகொரியா செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் அதை அமெரிக்கா பொறுத்துக்கொள்ளாது. அணு ஆயுத நாடுகள் பட்டியலில் இடம் பிடித்துவிடலாம் என வடகொரியா நினைக்கிறது. அதை அவர்கள் மறு பரிசீலனை செய்ய வேண்டும். இது தொடர்பாக வடகொரியாவுடன் அமெரிக்கா மற்றும் அதன் நேச நாடுகள் மிகக் கடுமையான பேச்சுநடத்தி வருகின்றன.

வடகொரியாவுக்கு எதிர்காலம் கிடைக்கும் அல்லது அணு ஆயுதங்கள் கிடைக்கும். ஆனால், இரண்டையும் பெற முடியாது. வடகொரியாவின் அணு ஆயுதச் சோதனை வடகிழக்கு நாடுகளில் அணு ஆயுதப் போட்டியை ஏற்படுத்தும். வடகொரியாவின் அணு ஆயுதச் சோதனையைத் தடுப்பதற்காக எங்களால் முடிந்த எல்லா முயற்சிகளையும் செய்வோம். அதை மீறி வடகொரியா சோதனை செய்தால் அமெரிக்கா என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதை இப்போது தெரிவிக்க மாட்டோம். வடகொரியா அணு ஆயுதச் சோதனை செய்யும்நாள், அந்நாட்டுக்கு மோசமான நாளாக இருக்கும்''- என்றார் கிரீஸ். (க)

## மாவோயிஸ்ட்டு தலைவருடன் நேபாளப் பிரதமர் கிரிஜா பேச்சு

காத்மண்டு, ஒக்.9

உயர்மட்ட அளவில் நடக்கவிருக்கும் பேச்சின்போது விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து முடிவு செய்வதற்காக மாவோயிஸ்ட்டு தலைவர் பிரசந்தாவை நேபாள பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலா சந்தித்தார்.

நேபாளத்தில் இடைக்கால அரசு அமைப்பது தொடர்பாக ஏழு கட்சிக் கூட்டணியினரும், மாவோயிஸ்ட்டு தலைவர்களும் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர். இந்தச் சந்திப்பின்போது மாவோயிஸ்டுகளை நாடாளுமன்றத்தில் சேர்த்துக்கொள்வது, இடைக்கால அரசியல் அமைப் புச் சட்டத்தை அமுல்படுத்துவது, ஆயுதங்கள் மேலாண்மை, அரசியல் நிர்ணய சபைத்தேர்தல் போன்ற அம்சங்கள் குறித்து விவாதிக்கப்படும் என நெருங்கிய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

---


## இதய அஞ்சலி



ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.

*எங்கள் கல்லூரியின் முன்னாள் புகழ் பூத்த அதிபர்*

*திருமிகு* **தியாகராஜா** *அவர்கள் காலமான செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம்.*

***அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஸ்கந்தா சமூகம் பிரார்த்திக்கின்றது.***

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.


## பின்னுறுதித் தீர்வை

**யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்**

**ஜெபநேசன் பெண் அமலோ செல்வகுமாரி**
**22/4, விதானையார் ஒழுங்கை,**
**சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.**
**வழக்காளி**

**வழ. இல. மணநீக்கம் /661**

**எதிராக**

**நீக்கிலாப்பிள்ளை ஜெபநேசன்**
**கிளாலி, எழுதுமட்டுவாள்.**
**எதிராளி**

இவ்வழக்கு 2006ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 22ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்தபோது வழக்காளியும் வழக்காளி சார்பில் பதிவுபெற்ற சட்டத்தரணி சி.வீரகத்திப்பிள்ளை அவர்களும் பிரசன்னமாகியிருக்க இவ்வழக்கில் எதிராளிக்கு அழைப்புக்கட்டளை 09.08.2006 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு 31.08.2006 இல் இவ்வழக்கு மன்றில் கூப்பிடப்பட்ட போது எதிராளி சமுகமின்மையால் இவ்வழக்கு ஒரு முக விளக்கத்திற்கு நியமித்து இன்று ஒரு முக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்த மன்றின் அனுமதியைக் கோரி மன்றின் அனுமதியுடன் வழக்காளியின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்ட பின்னர் வழக்காளியின் பிராது,வ 1 ஆவணம் வழக்காளி மன்றில் இன்று அளித்த சாட்சியம் ஆகியவற்றை வழக்கேட்டுடன் சேர்த்து பரிசீலித்து வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெறத் தகுதியுடையவர் எனக் கண்டு பின்வருமாறு கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்குமிடையே 2002ஆம் ஆண்டு தை மாதம் 19ஆம் திகதி நிறைவேறிய பதிவுத் திருமணத்தை எதிராளி வேண்டுமென்று வழக்காளியை விட்டு பிரிந்து வன்ம உறவறுப்புச் செய்த குற்றத்திற்காக இத்தால் இரத்துச் செய்து வெற்றும் வெறிதுமானதாகும் எனக் கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வையின் பிரதி உதயன் தேசிய தினசரிப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தல் மூலம் எதிராளிக்கு பதில் சேவகம் செய்யப்பட்ட திகதியில் இருந்து மூன்று மாத காலத்திற்குள் எதிராளி எதுவித நடவடிக்கையும் எடுக்கத் தவறும் பட்சத்தில் விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் இப்பின்னுறுதித் தீர்வையானது முற்றாக தீர்வையாக்கப்படுமென கட்டளையிடப்படுகின்றது.

2006ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 22ஆம் திகதி

**இ.த.விக்னராஜா**
மாவட்ட நீதிபதி

வரைந்தது
***சி.வீரகத்திப்பிள்ளை***
வழக்காளியின் சட்டத்தரணி

நீதிமன்றின் கட்டளைப்படி
**து.சிறீமோகன்**
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்

(54242)

## தூதரகத்தின் முன் தீயிட்டு தற்கொலை

கொழும்பு,ஒக்.9

நோர்வே தூதரகத்தின் முன்னால் தனக்குத் தானே தீயிட்டு ஒருவர் மரணமானார்.

நோர்வேயை நாட்டிலிருந்து வெளியேறக்கோரியே இவர் தனக்குத் தானே எரியூட்டியதாகத் தெரிவிக்கப்பட்டது.

## பெருமளவு பொருள் எடுத்துவரத் தடை

நல்லூர்,ஒக்.9

நெடுந்தீவுக்கான பயணிகள் படகு குமுதினியில் பெருமளவில் பொருள்கள் விற்பனைக்காக எடுத்து வருவது தடைசெய்யப்பட்டுள்ளது.

தற்சமயம் பிரயாணி ஒருவர் தமது பாவனைக்கென ஐந்து தேங்காய்களையும் மீன், கருவாடு போன்ற பொருள்களை இரண்டு கிலோ வரையிலுமே எடுத்துவர முடியும். (111)


**THE ROYAL COLLEGE OF JAFFNA**

**'பாலர் பாடசாலை' ஆங்கில மூலம் தமிழ்ப்பாடம் மட்டும் தமிழ் மூலம் 5 வயது மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். அனுமதிக்கு தலைமை ஆசிரியர் விக்னேஸ்வரன் ஆச்சாரி, (வண்ணை சிவன் கோயிலருகில் யாழ்ப்பாணம்.) THE ROYAL IS THE BEST**

**ராஜா மில்**

தேங்காய்எண்ணெய், இலுப்பெண்ணெய் நவீன இயந்திரத்தின் மூலம் குறைந்த செலவில் நிறைந்த தரத்துடன் வடித்துக் கொடுக்கப்படும். அத்துடன் கொப்பறாவும் விலைக்குக் கொள்வனவு செய்யப்படும்.

**''ராஜா மில்''**
**இல. 15, மார்ட்டின் றோட், யாழ்ப்பாணம்.** (54245)

**பொருளியற் கல்லூரி**

*கணக்கீடு*

D.C.M இல் கல்வி கற்ற A/L 2007, 2008 மாணவர்களுக்கான கணக்கீடு வகுப்புக்கள் யாழ். பொருளியற் கல்லூரியில் நடைபெறும்.

*ஆரம்பம் 11.10.2006 (புதன்)*

2008 - 3.00, 2007 - 4.00

B.B.A (Hons)


## மரண அறிவித்தல்கள்

### *அருளம்பலம் கார்த்திகேசு*

**(RTD. AGRICULTURAL OFFICER, CONSULTANT (UNDP, FAO)**

நல்லூர், அருளம்பலம் வீதியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் கார்த்திகேசு அவர்கள் 06.10.2006 அன்று கொழும்பில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருநெல்வேலி கிராம விதானையார் அருளம்பலம் - நாகம்மா தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற இராசலட்சுமியின் கணவரும், காலஞ்சென்ற சோமசுந்தரம் (RTD. ACMT கச்சேரி, யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற சிவஞானம் (RTD ADMINISTRATIVE OFFICER, EDUCATION OFFICE BATTICALOA) காலஞ்சென்ற கனகசுந்தரம் Asst. Director of Education, வவுனியா), திருமதி சீ.இலங்கம்மா, காலஞ்சென்ற கு.பரிமளம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் இறுதிகிரியைகள் இன்று 09.10.2006 இல் கல்கிசை இந்து மயானத்தில் நடைபெறும்.

***118, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.***

தகவல்:
**சோ.புவனேந்திரன்**

(54241)

### *நீதிராஜா தனராஜா*

**(Director, Greenlands Hotel Ltd, Colombo - 06)**



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, 89, புதுச்செட்டித்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட நீதிராஜா தனராஜா 07.10.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து நீதிராஜா (J.P. -முன்னாள் செனட் சபை உறுப்பினர்) திலகவதி தம்பதியரின் ஏகபுதல்வனும், காலஞ்சென்ற வைத்தியகலாநிதி தம்பு இராசையா யோகாம்பிகை தம்பதியரின் மருமகனும், ஜெயந்தியின் அன்புக் கணவரும் மயூரன், (Australia) ,பிரதீபன், பார்த்திபன், ஆதித்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவஹாரிணியின் அன்பு மாமனும், பத்மினிதேவி, அமுதாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், V.R. வடிவேற்கரசன், S.T.S அருளானந்தம், வசந்தி, வத்சலன், ஜனார்த்தனன், சிவகுமார், சுகந்தி ஆகியோரின் மைத்துனரும், ஞானராஜா, அனுராதா, வசந்தி, மகாதேவி, செல்வச்சந்திரன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.10.2006 திங்கட்கிழமை பிற்பகல் 4மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொரளை, கனத்தை மயானத்திற்கு பிற்பகல் 5 மணியளவில் எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

***சுதுமலை வடக்கு, மானிப்பாய். 021 2226727***

தகவல்:
**செ.ஞானராஜா (சகலன்)**
89, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு - 13.
0112326440

(54244)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயானங்கள் புனரமைப்பு

தென்மராட்சி,ஒக்.9

நுணாவில் மேற்கு, கொல்லங்கிராய் இந்து மயானம், சாவகச்சேரி கச்சாய் வீதி கத்தோலிக்க சேமக்காலை ஆகியவை அண்மையில் புனரமைக்கப்பட்டுள்ளன. உலக உணவு திட்ட நிறுவனத்தினரால் இந்த மயானங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

இவ்வேலைத்திட்டங்களை மேற்கொண்ட பொது மக்களுக்கு உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.


உங்கள் இல்லங்களில் இருந்து I.D.D தொலைத்தொடர்பு சேவைகளுக்கு




நிமிடத்திற்கு 10/=

சகலவிதமான
தொலைத் தொடர்பு
அட்டைகளையும்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள

(54236)

SRI MURUGAN
Tele Communication
& Agency Post Office

303, K.K.S. Road,
Jaffna. T.P. 021 222 5392


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை செல்வி சசிகலா
பேரின்பநாயகம் அவர்களின் அன்புத் தாய்
அமரர் **அன்புமலர் பேரின்பநாயகம்**
அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி

*தாய் அன்பால் உங்கள் உள்ளம்*
*தவிக்கின்ற வேளையில் .....எம்*
*எண்ணம் போல் இன்றி எதுவும் இறைநியதி என்றே..*
*அன்னையின் நல் ஆத்மா சாந்திபெற வேண்டுகிறோம்.*
*ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!*

பாடசாலைச் சமூகம்
யா/கோண்டாவில் இந்து ம.வி.

(54225)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

| மண்ணக வாழ்வில் | விண்ணக வாழ்வில் |
|---|---|
| 18 - 09 - 1962 | 12 - 10 - 2003 |



**அப்புக்குட்டி உதயசீலன்** (அப்பன்)

திதி: திருதியை (09.10.2006)

*அப்பா! அப்பா! எம்மருமை அப்பா!*
*நெஞ்சுக்குள்ளே எ[illegible]ம [illegible]வத்து*
*நேசமூட்டி வளர்த்து வந்தீர்*
*எம்முடன் இருந்துவிட்டு மாயமாய்*
*மறைந்ததேன் - அப்பா?*
*காணவேண்டிய காட்சிகள் அத்தனையும்*
*நீர் இழந்து கனதூரம் சென்றதேனோ?*
*ஆயிரம் உறவுகள் இருந்தாலும்- அப்பா*
*என்றழைக்க இனி உறவு இல்லை*
*ஆண்டுகள் மூன்று கடந்தாலும் எம் மனக்*
*காயங்கள் இன்னும் மாறவில்லையப்பா!*
*உமது ஆன்மா சாந்திபெற*
*வேண்டுகிறோம் இறைவனிடம்*
*ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!*

(54219)

கணேஸ்வரம்,
அளவெட்டி கிழக்கு,
அளவெட்டி.

என்றும் உங்களை நினைத்து
உள்ளம் உருகி வேண்டிநிற்கும்
மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.

# ஆவணம் இன்றி வாகனம் செலுத்தியவருக்கு அபராதம்

தென்மராட்சி,ஒக்.9

ஆவணங்கள் எதுவுமின்றி வாகனம் செலுத்திவந்த சாரதி ஒருவருக்கு சாவகச்சேரி நீதிவான் 14ஆயிரம் ரூபா அபாரதம் விதித்துள்ளார்.

வாகனவரி, காப்புறுதி, சாரதிய அனுமதிப்பத்திரம், வாகன இலக்கத்தகடு ஆகியவை இல்லாத நிலையில் வாகனத்தினை செலுத்தி வந்தவருக்கே அபராதம் விதிக்கப்பட்டது.

அபராதத் தொகையினை செலுத்தத் தவறின் 14 மாதங்கள் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்.

# நான்காவது நாளாகவும் பெற்றோல் விநியோகம்

அரியாலை,ஒக்.9

யாழ்.ப.நோ.கூ.சங்கத்தின் முற்றவெளி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றும் பெற்றோல் விநியோகிக்கப்பட்டது.

பிரதேச செயலகங்களால் விநியோகிக்கப்பட்ட எரிபொருள் பங்கீட்டு அட்டையைப் பெற்றவர்களுக்கு தலா 200 ரூபாவிற்கு பெற்றோல் வழங்கப்பட்டது.

கடந்த 4ஆம், 5ஆம் திகதிகளில் பெற்றோல் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கே நேற்று முன்தினமும் நேற்றும் பெற்றோல் வழங்கப்பட்டதாக கூட்டுறவுச்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. அரச ஊழியர் மற்றும் தனியார் துறை ஊழியர்கள் ஒரு வரிசையாகவும், ஏனையோர் இன்னொரு வரிசையிலும் நின்று தமக்குரிய பெற்றோலைப் பெற்றுக்கொண்டனர்.

(17)

# பெற்றோலுக்கு பாவனையாளர் அதிகாலை முதல் தவம்

சுழிபுரம்,ஒக்.9

சித்தன்கேணியில் சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பெற்றோல் விநியோக நிலையத்தில் பெற்றோல் பெறுவதற்காக மோட்டார் வாகனங்களில் நீண்ட வரிசையில் கடும் வெயிலையும் பொருட்படுத்தாது நின்று பாவனையாளர் பெற்றோலைப் பெற்றனர்.

அதிகாலை முதலே பெற்றோலைப் பெறுவதற்காக பல கிராமங்களைச் சேர்ந்தவர்கள் வந்து காத்திருந்தனர். இராணுவத்தினரும் காவல் கடமையில் அங்கு நின்றனர். (ப-28)


## சேவை

55,000 அமெரிக்க லொத்தர் விசா இலவச விண்ணப்ப விவரங்களுக்கு,
**Penguin Book Shop**
B2-F23, Bloemendhal Flats, Colombo - 13.
T.P: 0716806843, 2438367



af

**Alliance Francaise de Jaffna**
83,Palaly Road, Kantharmadam, Jaffna
Phone: 021 222 8093
E-mail: alliancejaffna@yahoo.com

யாழ்.பிரெஞ்சு நட்புறவுக் கழகம்
பிரெஞ்சு மொழி வகுப்புகள்

**புதிய பிரிவு**

கல்லூரி மாணவர்களுக்கான, வேலை செய்வோருக்கான, மொழிபயிலும் ஆர்வமுள்ளோருக்கான தொடக்க நிலை வகுப்புகள் 14.10.2006 அன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.

இத்திட்டம் இலங்கையிலுள்ள பிரெஞ்சு தூதரகத்தின் உதவியுடன் நடைபெறுகின்றது. ஒரு வருடத்தில் சர்வதேச தரத்திலான பிரெஞ்சு மொழிப் பரீட்சைக்கு தோற்ற முடியும்.

பதிவுகளை உடன் மேற்கொள்ளவும். பதிவுகளுக்கு நேரில்/தொலைபேசியில் தொடர்புகொள்ளவும்.



# கலாலயா

பயிற்சியகம்
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

- கேக் ஐஸிங் ✵ கூந்தல் அலங்காரம் ✵ உணவு தயாரித்தல் } 2 மாதம்
- Fabric Painting ✵ பூ வேலை ✵ கைவேலை
- Facial ✵ சாறி பிளவுஸ், பஞ்சாபி தைத்தல் - 2 வாரம்
- புதிதாகத் தையல் பழக விரும்புவோருக்கான தையல் வகுப்புகள் - 6 மாதம்

கிழமை நாள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன.
புதிதாகச் சேர விரும்பும் மாணவிகளுக்கும் அனுமதி வழங்கப்படுகின்றன.
☞ மேலும் விபரங்களைவெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப 2.00 மணி வரை அறிந்து கொள்ளலாம்.

பதிவாளர்.


## ஞானச்சுடர் புரட்டாதி இதழ்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வெளியிடும் ஞானச்சுடர் புரட்டாதி மாத சஞ்சிகையின் 104 ஆவது இதழ் வெளிவந்துள்ளது.

இந்த சஞ்சிகையை கடல் கடந்த நாடுகளில் [illegible] பெற்று ஆதரவு நல்கி வருகின்றார்கள்.(ப-28)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

820 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மேடம் 02 14 45 49

06-10-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 5461084 - 5471475

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 224,576 | 10/- | 2,245,760/- |
| 2 இலக்கங்கள் | 20,671 | 20/- | 413,420/- |
| 1 இல. + லக்கினம் | 20,544 | 30/- | 616,320/- |
| 2 இல. + லக்கினம் | 1,843 | 100/- | 184,300/- |
| 3 இலக்கங்கள் | 544 | 500/- | 272,000/- |
| 3 இல. + லக்கினம் | 57 | 5,000/- | 285,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,000,000/- | 1,000,000/- |
| மொத்தம் | | | 5,216,800/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 268,243 | | 6,240,300/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல.4592548 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2006 ஒக்டோபர் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, செர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அம்பாறை | 5463332-3-61 |
| கம்பஹா | 5466669-4-05 |
| மட்டக்களப்பு | 5468090-1-97 |
| பொலன்னறுவை | 5461433-3-65 |
| இரத்தினபுரி | 5466495-8-98 |


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 17 - 03 - 1946 | 09 - 09 - 2006 |



திருமதி
**அன்புமலர் பேரின்பநாயகம்**

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட எம் அன்னைக்கு
இதய அஞ்சலி.

தாவடி,
கொக்குவில்.

(53988)

கணவர்,
பிள்ளைகள்.

## எழுபதாவது பிறந்ததினமும் 23 ஆவது நாள் நினைவஞ்சலியும்



புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்திவிநாயகர் தேவஸ்தான பரம்பரைக் குருவும் இலங்கைப் போக்குவரத்துச்சபை (கோண்டாவில்) முன்னாள் பிரதி முகாமையாளருமாகிய

அமரர்
**சோமசுந்தர ஐயர் பாலகிருஷ்ண சர்மா**
(குஞ்சுக்கிளி ஐயா)

அவர்களின் எழுபதாவது பிறந்ததினமும்
23 ஆவது நாள் நினைவஞ்சலியும்
(09.10.2006)

*அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்து*
*பாரினில் எம்மை வாழ வைத்த தெய்வமே!*
*காலனின் கைப்பிடியில் கனவாய் மறைந்து விட்டீர்கள்*
*காலமெல்லாம் எங்கள் நினைவில் நிறைந்து*
*எம்மை வழி நடத்துவீர்கள்.*

ஆறாத்துயரில் தவிக்கும்
சோ.தேவநாத சர்மா (அருண்),
ஊரெழு கிழக்கு,
திருமதி அபர்ணா சசிகர சர்மா
(ஜேர்மனி) மற்றும் குடும்பத்தினர்.

(54229)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரியில் ஆயிரத்து 600 வாகனங்களுக்குப் பெற்றோல்

தென்மராட்சி,ஒக்.9

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிலையத்தில் கடந்த 4ஆம், 5ஆம் திகதிகளில் ஆயிரத்து 600 வாகனங்களுக்கு பெற்றோல் விநியோகிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட எரிபொருள் பங்கீட்டு அட்டைகளில் மூன்றிலொரு பங்கினருக்கே சாவகச்சேரி எரிபொருள் நிலையத்தில் பெற்றோல் விநியோகிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை மேற்படி எரிபொருள் நிலையத்திற்கு 3ஆயிரத்த 300 லீற்றர் பெற்றோல் வழங்கப்பட்டது. இதன்படி ஒவ்வொரு வாகனத்திற்கும் 200ரூபா பெறுமதியான பெற்றோல் விநியோகிக்கப்பட்டது.

பிரதேச செயலகத்தினால் 3ஆயிரத்து 500இற்கு மேற்பட்ட மோட்டார் சைக்கிள் உட்பட 4ஆயிரத்துக்கு மேற்பட்ட வாகனங்களுக்கு எரிபொருள் பங்கீட்டு அட்டை வழங்கப்பட்டிருந்தது.

கொடிகாமம் எரிபொருள் நிலையம், கைதடியில் உள்ள இரு எரிபொருள் நிலையங்கள் ஆகியவற்றில் எரிபொருள் பெறுவதற்கு பங்கீட்டு அட்டை பெற்ற பலரும் அந்தந்த எரிபொருள் நிலையங்களுக்கு பெற்றோல் பெறச் செல்வதற்கு அவர்களின் வாகனங்களில் பெற்றோல் இல்லாததால் செல்ல முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - சாவகச்சேரி எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் பெறுவதற்கு ஆயிரத்து 750 பேருக்கும் கொடிகாமம், கைதடி ஆகிய எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் பெறுவதற்கு தலா ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கும் பிரதேச செயலகத்தினால் எரிபொருள் பங்கீட்டு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வயல் உழுவதற்காக டிராக்டர்களுக்கு நியாய விலையில் டீசல் விநியோகம்

## அதிக கூலி கொடுக்க வேண்டாமென அறிவுறுத்தல்

வடமராட்சி,ஒக்.9

வடமராட்சிப் பிரதேசத்தில் நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் வயல் நிலங்களை உழுது பண்படுத்த வசதியாக டிராக்டர் வண்டிகளுக்கு டீசல் வழங்கப்பட்டு வருகிறது.

நியாய விலைக்கு (கட்டுப்பாட்டு விலை) டீசல் வழங்கப்படுவதால் வயல் நிலங்களை உழுது பண்படுத்த அதிக கட்டணத்தை டிராக்டர் வண்டி உரிமையாளர்களுக்கு வழங்க வேண்டாம் என அம்பன், புலோலி கமநல சேவை நிலையங்களின் பெரும்பாக உத்தியோகத்தரும் யாழ்.பிராந்திய கமநல சேவை நிலையங்களின் தலைமை பெரும்பாக உத்தியோகத்தருமான என்.உருத்திரேஸ்வரன் விவசாயிகளைக் கேட்டுள்ளார்.

அம்பன், புலோலி கமநல சேவை நிலையப் பிரிவுகளைச் சேர்ந்த 52டிராக்டர் வண்டிகளுக்கு வயல் நிலங்களை உழுது பண்படுத்தவென டீசல் எரிபொருள் நிலையங்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ளதாக பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்தார். வயல் நிலங்களை உழுது பண்படுத்தும் பணியில் ஈடுபடும் ஏனைய டிராக்டர் வண்டி உரிமையாளர்களும் டீசல் பெற விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. வயல் நிலங்களை உழுது பண்படுத்த வசதியாக செய்யப்பட்டுள்ள இந்த ஏற்பாட்டை தக்க முறையில் விவசாயிகள் பயன்படுத்துவதோடு, இதற்கென அதிகமான கட்டணத்தை டிராக்டர் வண்டி உரிமையாளர்களுக்கு வழங்கவேண்டாமெனவும் கேட்கப்பட்டுள்ளது.

# ஆழிப்பேரலை நினைவாக கணனிகள் அன்பளிப்பு

சுழிபுரம்,ஒக்.9

ஆழிப்பேரலை நினைவாக ஜேர்மன் நாட்டு மக்கள் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்திற்கு 10 கணனிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

மாணவர்களின் கல்வியை ஊக்குவிப்பதற்காக அன்பளிப்புச் செய்யப்பட்ட இக்கணனிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் வித்தியாலய அதிபர் க.நடராசா தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானைக் கோட்டக்கல்வி அதிகாரி துரை எங்கரசு கலந்துகொண்டார்.

(202-28)

# சுற்றறிக்கை தாமதமானதால் விண்ணப்பிக்க முடியாதநிலை

## அறநெறிப் பாடசாலை மாணவர்கள் விசனம்

சுழிபுரம்,ஒக்.9

சேக்கிழார் விழவை முன்னிட்டு அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான இந்து சமய அறிவுப் போட்டிக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பத் திகதி முடிவடைந்த பின்னரே அது தொடர்பான சுற்றறிக்கைகள் யாழ்ப்பாணத்திலுள்ள கலை, கலாசார அபிவிருத்தி நிலையங்களுக்குக் கிடைத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அடுத்தமாதம் சேக்கிழார் விழாவை நடத்தவுள்ளது. அதனையொட்டி திணைக்களத் தில் பதிவுசெய்த அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே இந்துசமய அறிவுப்போட்டி நடத்துவதற்கான விண்ணப்பங்களைக் கோரியிருந்து. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி கடந்த மாதம் 25 ஆம் திகதியாகும். ஆயினும் இது தொடர்பான சுற்றறிக்கை யாழ்ப்பாணத்திலுள்ள கலை, கலாசார அபிவிருத்தி நிலையங்களுக்கு கடந்த 4 ஆம் திகதியே தபால் மூலமாகக் கிடைத்துள்ளது. இதனால் யாழ்ப்பாணத்திலுள்ள அறநெறிப் பாடசாலைகள் போட்டியில் பங்குபற்ற முடியாதுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (202-28)

# யாழ்.மாவட்ட நூலகங்களிலும் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள்

தென்மராட்சி,ஒக்.9

யாழ்.மாவட்டத்தில் உள்ள பொது நூலகங்களில் தேசிய வாசிப்பு மாதம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இலங்கை நூலக சங்கத்தினர் ஒக்ரோபர் மாதத்தினை தேசிய வாசிப்பு மாதமாக அனுஷ்டிக்குமாறு விடுத்த வேண்டுகோளையடுத்து சகல பொது நூல் நிலையங்களிலும் வாசிப்பு மாதம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

வாசகர்களை ஊக்குவிக்கும் பொருட்டு பொது நூல்நிலையங்களில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் வீடு வீடாகச்சென்று புத்தகங்கள் சேகரிக்கும் நிகழ்வினை மேற்கொள்ள முடியாததால் பொதுமக்கள் நூலகத்திற்கு புத்தகங்கள் அன்பளிப்புச் செய்ய விரும்பினால் நேரடியாக நூலகத்தில் வழங்குமாறு சில பொது நூல் நிலையங்களில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுநூல் நிலையங்கள் மாணவர்களுக்கிடையிலான பேச்சுப் போட்டி, வாசிப்புப் போட்டி ஆகியவற்றை நடத்தத் திட்டமிட்டிருந்த போதிலும் தற்போதைய சூழ்நிலையில் அவற்றினை நடத்த முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

# தொல்புரம் ஆலயத்திற்கு புதிய தேர் மண்டபம்

சுழிபுரம்,ஒக்.9

தொல்புரம் மடத்துப் பிள்ளையார் ஆலய முருகன் தேர் தரிப்பிடத்துக்கு 8 லட்சம் ரூபா செலவில் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் இடம்பெற்ற தேர்த்திருவிழாவில் முருகப் பெருமான் புதிய தேரில் ஆரோகணித்தார். அப் புதிய தேரைப் பாதுகாப்பதற்காகத் தேர்த்திருவிழா உபயகாரர்களின் நன்கொடையில் பதிய தேர் மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

(202-28)

# வடமராட்சி மேட்டுநில விவசாயிகளுக்கு விநியோக அட்டைமூலம் மண்எண்ணெய்

வடமராட்சி,ஒக்.9

வடமராட்சி பிரதேச மேட்டு நில பயிர்ச்செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கு வழங்குவதற்கென ப.நோ.கூ.சங்கங்களுக்கு இவ்வாரம் முதல் 15ஆயிரம் லீற்றர் மண்எண்ணெய் வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கான எரிபொருள் விநியோக அட்டை மூலம் மண்எண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது.

அவ்வப்பகுதி கமக்காரர் அமைப்புக்களின் சிபார்சுடன் புலோலி அம்பன் கமநல சேவை நிலையங்களுக்கு விண்ணப்பித்து பெரும்பாக உத்தியோகத்தரின் அனுமதியுடன் விவசாயிகளுக்கான எரிபொருள் விநியோக அட்டையைப் பெற்று கூட்டுறவுச்சங்கக்கிளைகள் மூலம் மண்எண்ணெயை பெற்றுக்கொள்ளலாம்.

வடமராட்சிப் பிரதேச விவசாயிகளுக்கான மண்எண்ணெய் விநியோகத்துக்கென புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு 6ஆயிரம் லீற்றரும், கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்துக்கு 4ஆயிரம் லீற்றரும், உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்துக்கு 3ஆயிரம் லீற்றரும், பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு 2ஆயிரம் லீற்றருமாக மண்எண்ணெய் வாராந்த விநியோகத்துக்கென யாழ்.அரசாங்க அதிபரால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய கமநலசேவை நிலைய தலைமை பெரும்பாக உத்தியோகத்தரும், அம்பன் புலோலி கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தருமான எஸ்.உருத்திரேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(ப)

# சிறப்புற நடைபெற்ற முதியோர் தின விழா

யாழ்ப்பாணம்,ஒக்.9

அளவெட்டி மேற்கு மாதர் அபிவிருத்திச் சங்கம் ஏற்பாடு செய்த முதியோர் தினவிழாவும், ஊனமுற்றோர் தினநிகழ்வும் அளவெட்டி மேற்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தில் சிறப்புற நடைபெற்றன.

மாதர் அபிவிருத்திச் சங்கத்தலைவி சி.செல்வராணி தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் வலி.வடக்கு சமூகசேவை உத்தியோகத்தர் த.புரட்சிதாசன், அளவெட்டி மேற்கு கிராம அலுவலர் மாலாதேவி மதிவதனன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

மேற்படி விழாவிற்கான அனுசரணையை சிவபூமி அறக்கட்டளையினர் வழங்கியிருந்தனர்.

# கமக்காரர் அமைப்பினால் குளம் புனரமைப்பு

வடமராட்சி,ஒக்.9

மந்திகை குளவெளிகுளம் புலோலி வடமேற்கு கமக்காரர் அமைப்பினால் ஆழமாகத் தோண்டப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

நூற்றாண்டுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப்படாத இக்குளத்தைப் புனரமைப்பதற்கு வேலைக்கான உலர்உணவுப் பொருள்கள் உலக உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டன.

குளம் புனரமைக்கப்பட்டதால் அருகில் உள்ள தோட்டங்கள் மாரி காலங்களில் வெள்ளத்தில் மூழ்குவது தவிர்க்கப்பட்டுள்ளது.

(ப)

# பெரும் நட்டத்தை எதிர்நோக்கும் வடமராட்சி திராட்சை உற்பத்தியாளர்

வடமராட்சி,ஒக்.9

வடமராட்சி, கரணவாய் பகுதியிலுள்ள மண்டான், கல்லுவம் ஆகிய இடங்களில் திராட்சைப் பழச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் இம்முறை பெரும் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

மண்டான், கல்லுவம் ஆகிய இடங்களில் பெரும் நிலப்பரப்பில் திராட்சைப் பழச் செய்கை விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இம்முறை அறுவடைக் காலத்தில் போக்குவரத்து தடங்கல் காரணமாக உரிய முறையில் திராட்சைப்பழத்தை சந்தைப்படுத்த முடியவில்லை. முன்னைய காலங்களில் கிலோ 150 ரூபா தொடக்கம் 200 ரூபா வரையான விலைக்கு திராட்சைப் பழத்தை உற்பத்தியாளர்கள் சந்தைப்படுத்தி வந்தனர். தற்போதைய அசாதாரண சூழ்நிலையால் கிலோ 50 ரூபா தொடக்கம் 60 ரூபா வரையிலேயே சந்தைப்படுத்தப்படுவதுடன், சிலவேளை அவ் விலைக்கும் சந்தைப்படுத்த முடியாமல் இருப்பதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

உற்பத்திக்கான உர வகைகள்,மருந்து வகைகளின் செலவினங்கள், பராமரிப்புச் செலவினங்கள் அதிகரித்துள்ளதுடன் சந்தை வாய்ப்பும் குறைந்துள்ளதால் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதென உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

(ப)

# 7 பிணக்குகளுக்கு ஒரு மாதத்தில் தீர்வு

வடமராட்சி,ஒக்.9

வடமராட்சி, கரவெட்டிப் பிரதேச மத்தியஸ்தர் சபையினால் ஒருமாதகாலத்தில் 7 பிணக்கு களுக்கு சமாதானம் மூலம் தீர்வு காணப்பட்டுள்ளது.

மேலும் 5இற்கு மேற்பட்ட பிணக்குகள் மத்தியஸ்தர்சபை முன் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது. இப்பிணக்குகளுக்கும் இம்மாத முடிவுக்குள் தீர்வு காணப்பட்டு விடும் எனத் தெரிவிக்கப்பட்டது. கரவெட்டி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் பிரதி ஞாயிறு தோறும் மத்தியஸ்தர் சபையினால் பிணக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டு வருகின்றன.

(ப)

# கேட்பாரற்ற முறையில் சட்டவிரோத மண் அகழ்வு நடைபெறுகின்றது

தென்மராட்சி கிழக்கு,ஒக்.9

வரணிப்பகுதியில் தற்சமயம் சட்டவிரோத மண்அகழ்வு கேட்பாரற்ற முறையில் பெருமளவில் இடம்பெற்று வருகின்றது.

வரணி, இடைக்குறிச்சி கிழக்குப்பகுதியிலும் வரணி வடக்கு, குருக்கள் குடியிருப்பு மேற்குப்பகுதியிலும் மக்கள் இல்லாத பிரதேசங்களிலேயே இவ்வாறு சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெறுகின்றது. நாளாந்தம் நூற்றுக்கணக்கான பார ஊர்திகள் இவ்வாறு மண் ஏற்றிக்கொண்டு வரணி கரம்பான் தில்லையம்பலப்பிள்ளையார் வீதியூடாக பயணம் செய்வதை காணக்கூடியதாக உள்ளது. அதேவேளை வரணி, கரம்பான் பிள்ளையார் கோயில் பகுதியில் வயல்கள் விதைக்கப்பட்ட நிலையிலும் பயிர்களினூடாக மண்ணை ஏற்றிக்கொண்டு உழவியந்திரங்கள் செல்வதனால் பயிர்கள் சேதமடைவதாக வயற் சொந்தக்காரர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வரணி - கரம்பான் தில்லையம்பலம் வீதியால் இப்பாரவூர்திகள் பயணிப்பதனால் தினமும் பயணிகள் பயணம் செய்யும்போது பலத்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (ப-122)

# வெண்டிக்காய் வற்றலும் வடகமும்...

குடாநாட்டின் கால சூழ்நிலைக்கேற்ப எம்மை தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அமையவும், விலைவாசியில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ளவும் முற்கூட்டியே நடவடிக்கை எடுக்கும் முகமாக சந்தையில் கிடைக்கும் மரக்கறிகளைக் கொண்டு அவற்றை எதிர்காலத்திலும் பயன்படுத்தக்கூடிய வகையில் மாற்றியமைக்க வேண்டும். குறிப்பாக சந்தையில் வெண்டிக்காய் முற்றியதும் பிஞ்சுமாக கலந்து காணப்படுகிறது. இதில் பிஞ்சு கறிக்குப் போக முற்றியதை வீணாக்காமல் வற்றலாகவும் வடகமாகவும் மாற்றலாம்.

**வற்றல் :-** வெண்டிக்காயை சுத்தமாக்கி மெல்லிய வட்டமான துண்டுகளாக வெட்டி 3 - 4 நாள்கள் [illegible] இட்டு நன்கு [illegible] பின்னர் போத்தல், பொலித்தீன் உதவியுடன் காற்றுப்புகாமல் பேணிவைக்கலாம். தேவையான நேரத்தில் பொரித்தும் குழம்பு வைத்தும் சாப்பிடலாம். எண்ணெய் விலையைக் கருத்திற்கொண்டால் குழம்பு வைத்தலே சாலச்சிறந்தது.

**வடகம் :-** வெண்டிக்காயை சுத்தமாக்கி மிகவும் சிறிய சிறிய துண்டுகளாக வெட்டி, ஊறவிட்டு அரைத்த உழுத்தம்பருப்பு, பெருஞ்சீரகம், உப்பு, மிளகாய் கொண்ட கலவையுடன் சேர்த்து வடகங்களாக தட்டி ஈரப்பற்று இல்லாமல் போகும் வரை நன்கு காயவிடவும். காய்ந்த பின்னர் போத்தல்களில் இட்டு தேவையான பொழுது பொரித்து உணவுடன் சேர்த்து சாப்பிடலாம்.

தொகுப்பு

[illegible]ாந்தன் (விவசாய பீடம்).

# மண் ஏற்றிவந்த வாகனம் தடம் புரண்டது

தென்மராட்சி கிழக்கு,ஒக்.9

வரணிப்பகுதியில் சட்டவிரோத மண் ஏற்றிக்கொண்டு வந்த பார ஊர்தி ஒன்று கரம்பான் தில்லையம்பலம் வீதியில் கடந்த வாரம் தடம்புரண்டது. எதிரே வந்த வாகனத்துக்கு இடம்கொடுப்பதற்கு பாதை ஓரத்தில் சென்றபோதே இவ்வாகனம் அருகில் உள்ள வயலினுள் தடம்புரண்டுள்ளது. இதனால் வாகனத்துக்கு சேதம் ஏற்பட்டபோதும் வாகனத்தில் பயணம் செய்தவர்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை எனக் கூறப்பட்டது.

(ப-122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மினி உலகக் கிண்ண முதலாவது தகுதிச்சுற்று ஆ...

# உபுல் தரங்கவின் அபார சதத்தால் பங்களாதேஷை வீழ்த்தியது இலங்கை

மொகாலி,ஒக்.9

உபுல் தரங்க சதம் கைகொடுக்க மினி உலகக் கிண்ணத் தொடரின் முதலாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில் இலங்கையணி, பங்களாதேஷ் அணியை 37ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நேற்றுமுன்தினம் இந்தியாவில் ஆரம்பமாகியது. மொகாலியில் நடந்த முதலாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில் இலங்கை, பங்களாதேஷ் அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 302ஓட்டங்களைக் குவித்தது. தரங்க 105 ஓட்டங்களை விளாசி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தப் பெரிதும் உதவினார்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி,எதிர்பார்ப்புக்கு மாறாகக் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கையணியின் ஆரம்ப வீரர்களான ஜெயசூர்யா, தரங்க ஜோடி வேகமாக ஓட்டங்களை சேர்த்தது. 31 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில், சயிட் ரஸல் வேகத்தில் ஜெயசூரியா வெளியேறினார். அடுத்து களமிறங்கிய ஜெயவர்த்தன, அதிரடி ஆட்டத்தில் இறங்கினார். பர்கட் ரீசா வீசிய ஆட்டத்தின் 19ஆவது ஓவரில் ஜெயவர்த்தன மூன்று பவுண்டரிகள், 1 சிக்சர் உட்பட 18ஓட்டங்களை விளாசினார். மறுமுனையில் தரங்க அரைச்சதம் கடந்தார். அபாரமாக ஆடிக் கொண்டிருந்த ஜெயவர்த்தன(35), அப்துர் ரசாக்கின் பந்துவீச்சில் ஆட்டமிழக்க, சங்ககார களமிறங்கினார். நிதானமாக ஆடிய சங்ககரா(22), நீண்ட நேரம் நிலைக்கவில்லை. சர்வதேச கிரிக்கெட்டில் மிக நீண்ட இடைவெளிக்குப் பிறகு களமிறங்கிய அத்தபத்து அசத்தலாக ஆடினார்.

ஒரு முனையில் விக்கெட்டுகள் விழுந்தாலும் ஆரம்ப வீரராகக் களமிறங்கிய தரங்க 2006ஆம் ஆண்டு மினி உலகக் கிணண்த் தொடரில் முதல் சதம் அடித்த வீரர் என்ற பெருமையைப் பெற்றார். 122 பந்துகளை சந்தித்த இவர், ஒரு நாள் அரங்கில் தனது 5ஆவது சதத்தைப் பதிவுசெய்தார். 105ஓட்டங்கள் எடுத்திருந்தநிலையில், மோட்ராசாவின் பந்துவீச்சில் 'போல்ட்' ஆகி வெளியேறினார். அத்தபத்து 40ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். தொடர்ந்து களமிறங்கிய வாஸ்(4), முரளிதரன்(11) விரைவில் வெளியேற, இலங்கை அணி 50 ஓவரில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 302ஓட்டங்கள் குவித்தது. டில்சான்(26), மாலிங்க(7) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

மினி உலகக் கிண்ணத் தொடரின் முதல் ஆட்டத்தில் சதமடித்து அசத்திய தரங்க (105) புதிய மைல்கல்லை எட்டினார். தான் பங்கேற்றுள்ள 30 ஒரு நாள் ஆட்டங்களுக்குள் 5 சதங்கள் அடித்த உலகின் முதல் வீரர் என்ற சாதனையை அவர் படைத்தார். தவிர, 30 ஒரு நாள் ஆட்டங்களில் 1000ஓட்டங்களைக் கடந்த இரண்டாவது இலங்கை வீரர் என்ற பெருமையும் பெற்றார். முன்னதாக இலங்கையின் ரோய் டயஸ் 27 ஆட்டங்களில் 1000 ஓட்டங்களைக் கடந்துள்ளார்.

பின்னர் கடின இலக்கை விரட்டிய பங்களாதேஷ் மனம் தளராமல் போராடியது. அப்ரப் அகமட் (33), பர்கட் ரீசா (34), மோட் ராசா (30) ஆகியோர் ஓரளவு ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.நிதானமாக ஆடிய சகிபுல் ஹசன்(65) அரைசதம் அடித்தார். இறுதியில் பங்களாதேஷ் அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 265 ஓட்டங்களை மட்டுமே எடுத்து 37 ஓட்டங் களால் தோல்வி அடைந்தது. பந்துவீச்சில் மஹ்ரூப் 3விக்கெட்டுகளையும், வாஸ் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். (ம)

ஜப்பான் பகிரங்க டெனிஸ்

# பெடரர், பட்ரோலி பட்டம் வென்றனர்



ஜப்பான் பகிரங்க டெனிஸ் தொடரின் ஆட வர் பிரிவு இறுதியாட்டத்தில் பிரிட்டன் வீரரான ரிம் ஹென்மனை தோல்வியுறச் செய்து முதல்நிலை வீரரான ரோஜர் பெடரர் சம்பியனானார். மகளிர் பிரிவு இறுதியாட்டத்தில் வெற்றிபெற்ற பிரான்ஸ் வீராங்கனையான மரியன் பட்ரோலி டபிள்யூ.ரீ.ஏ. பட்டம் வென்றார்.

ரோக்கியோ நகரில் ஜப்பான் பகிரங்க டெனிஸ் நடைபெற்று வந்தது. முன்னதாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதியாட்டம் ஒன்றில் பெஞ்சாமின் பெக்கரை 6:3, 6:4 என்ற நேர் செற்கணக்கில் பெடரர் வெற்றிகொண்டு இறுதியாட்டத்திற்கு முன்னேறினார். மற்றைய அரையிறுதியாட்டத்தில் மரியோ அனிசிக் என்பவரை 6:2, 6:2 என்ற நேர் செற்கணக்கில் வீழ்த்திய ரிம் ஹென்மன் இறுதியாட்டத்திற்குத் தகுதிபெற்றார்.

நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் தொடக்கத்திலிருந்தே பெடரரின் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டது. முடிவில் 6:3, 6:3 என்ற நேர் செற்கணக்கில் வெற்றி பெற்று தொடரிற்கான ஏரி.பி. பட்டத்தைப் பெடரர் தனதாக்கிக்கொண்டார். ரின் ஹென்மனிற்கு எதிராக தொடர்ச்சியாக ஆறாவது வெற்றியைப் பெற்ற பெடரர் இந்த வருடத்தில் 9ஆவது பட்டத்தைக் கைப்பற்றியுள்ளார். அத்துடன், அவர் வெல்லும் 42ஆவது பட்டம் இதுவாகும்.

மகளிர் பிரிவு அரையிறுதியாட்டம் ஒன்றில் கமலி பின் என்பவரை 6:0, 6:1 என்ற நேர் செற்கணக்கில் மரியன் பட்ரோலி வீழ்த்தினார்.மற்றைய அரையிறுதியாட்டத்தின் ஜப்பான் வீராங்கனையான அகிகோ நகமுரா 7:6, 2:6, 6:4 என்ற செற்கணக்குகளில் சீனவீராங்கனையான ஜங்ஜான்ஷன் என்பவரை வீழ்த்தி இறுதியாட்டத்தில் பட்ரோலியுடன் மோதத் தகுதி பெற்றார்.

நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தின் முதல் செற்றில் நகமுரா 2:6 எனும் கணக்கில் வெற்றிபெற்றார். அடுத்த இருசெற்களிலும் சுதாகரித்து ஆடிய மரியன் பட்ரோலி 6:2, 6:2 என்ற கணக்கில் அவற்றைத் தன்வசமாக்கி தொடரிற்கான டபிள்யூ.ரீ.ஏ.பட்டத்தைத் தனதாக்கினார். பட்ரோலி வெல்லும் இரண்டாவது பட்டம் இதுவாகும்.(ம)

ஜப்பான் கிராண்ட் பிறிக்ஸ்

# அலோன்ஸா வெற்றி சூமேக்கர் பின்னடைவு

'போமுலா1' கார்ப்பந்தயத்தின் 17ஆவது சுற்றான ஜப்பான் கிராண்ட் பிறிக்ஸ் போட்டியில் பெர்ணான்டோ அலோன்ஸா வெற்றிபெற்றார். முன்னணி வீரரான மைக்கல் சூமேக்கருடைய காரின் இயந்திரம் பழுதடைந்தமையால் போட்டியிலிருந்து இடையிலேயே விலகினார். இதனைத் தொடர்ந்து இந்த வருடத்திற்காள உலகச் சம்பியன் பட்டத்தினைப் பெறுவதில் சூமேக்கர் பின்தள்ளப்பட்டார்.

கார்ப் பந்தயங்களில் பிரபலமானது 'போமுலா1'. இந்த வருடத்திற்கான 'போமுலா1' போட்டி 18 சுற்றுகளாக நடத்தப்படுகின்றது. 17ஆவது சுற்றான ஜப்பான் கிராண்ட் பிறிக்ஸ் நேற்று நடைபெற்றது. முன்னதாக நடந்த 16சுற்றுகளில் சூமேக்கரும், அலோன்சாவும் தலா 116 புள்ளிகளைப் பெற்றிருந்தனர். நேற்று நடைபெற்ற போட்டியின் தொடக்கத்தில் சூமேக்கர் முன்னிலை வகித்தாலும் அவருடைய கார் இயந்திரம் பழுதானமையால் போட்டியிலிருந்து விலகினார். தொடர்ந்து நடந்த போட்டியில் அலோன்ஸா முன்னிலை வகித்து வெற்றிபெற்று சூமேக்கரை விட 10 புள்ளிகள் முன்னிலை பெற்றார். (ம)

விளையாட்டு

# இறுதி ஆட்டம்

ஜேர்மனியின் ஸ்ரட் கார்ட் நகரில் இடம்பெற்றுவரும் போர்ஷி டெனிஸ் கிராண்ட் பிறிக்ஸ் தொடரின் இறுதியாட்டத்தில் ரஷ்ய வீராங்கனையான நட்டியா பெட்ரோவா, பிரான்ஸ் வீராங்கனையான தாதினா குளோவினை எதிர்த்தாடவுள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் சக வீராங்கனையான சுவற்ல்னா குஸ்நெற்சோவாவை எதிர்த்தாடினார் பெட்ரோவா. ஆட்டத்தின் முதல்செற்றை 6:2 எனும் கணக்கில் கைப்பற்றிய பெட்ரோவா, இரண்டாவது செற்றை 1:6 எனும் கணக்கில் இழந்தார். மூன்றாவது செற்றில் சுதாகரித்து ஆடிய அவர் 6:4 எனும் கணக்கில் அந்தச் செற்றைக் கைப்பற்றி இறுதியாட்டத்திற்குள் நுழைந்தார். (ம)

# கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய பிரதம குரு
சிவஸ்ரீ சதா யோகீஸ்வரக் குருக்கள்
(ராஜாஜீக் குருக்கள்,நல்லூர்)
அவர்களின் அன்பு மகள்
**யோகீஸ்வரி**

அவர்கள் 06.10.2006 அன்று இறைபதம் எய்தியமையையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல எம் பெருமானைப் பிராத்திக்கின்றோம்.

நல்லூர் வடக்கு [illegible] நிரசேரப்பிள்ளையார்
தேவஸ்தா[illegible] [illegible]ங்காவல் குழுவினரும்,
நிர்வாக சபையினரும், ஊர் வாழ் மக்களும்.

(54247)

# மரண அறிவித்தல்

## தவமணி வன்னியசிங்கம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் 555, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட தவமணி வன்னியசிங்கம் நேற்று (08.10.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் டாக்டர் தம்பிப்பிள்ளை வன்னியசிங்கம்- அமரர் திருமதி தங்கராசம் வன்னியசிங்கம் தம்பதியரின் அன்பு மகளும் ஓய்வுபெற்ற வர்த்தகர் இரட்ணசிங்கம், கட்டடக் கலைஞர் காலஞ்சென்ற இராஜசிங்கம், செல்வராணி (ஓய்வு பெற்ற உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, யாழ்.), பாலசிங்கம் ( உரிமையாளர், மருதா புத்தகசாலை), திருமதி இந்திராணி தேவகிருஷ்ணா (ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி), அமரர் விஜயசிங்கம் (பரமேஸ்வரா, இந்துக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் செல்வி ஈஸ்வரஜனனியின் (உயிரியல் பிரிவு மாணவி - 2008, யாழ். இந்து மகளிர் கல்லூரி) தாயும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2006) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செல்வராணி.வன்னியசிங்கம்,
ஈஸ்வரஜனனி.

*555, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

# கிராம அபிவிருத்திக்கு சமுர்த்தி நிதி

தென்மராட்சி, ஒக்.9

சாவகச்சேரி வலய சமுர்த்திச் சங்கத்தினர் கோயில் குடியிருப்பு பகுதி உதயசூரியன் கிராம அபிவிருத்திக்கென ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளனர்.

அப்பகுதியில் உள்ள பொதுக் கிணற்றினைப் புனரமைப்பதற்கு 35 ஆயிரம் ரூபாவினையும் ஆறு குடும்பங்களுக்கு கிணறுகள் அமைக்க தலா 10 ஆயிரம் ரூபாவினையும், ஆறு குடும்பங்களுக்கு மலகூடம் அமைக்க தலா 5 ஆயிரம் ரூபாவினையும், வழங்கவென நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் சி.கபிலன் தெரிவித்துள்ளார்.

# அகதிகள் தூதரகத்தின் தமிழ்ப் பிரசுரங்கள்

சுழிபுரம்,ஒக்.9

இலங்கை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் (யூ.என்.சி. ஆர் இன்) செய்தி பிரசுரங்கள் தமிழ் மொழியில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன. சென்ற ஆண்டு செய்த வேலைத் திட்டங்கள் இவ்வாண்டு நடைபெறும் வேலைகள், சம்பந்தமான விவரம் யாவும் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது.

இங்குள்ள பொது நிறுவனங்கள், நூல் நிலையங்களில் இப்பிரசுரம் யாவும் வாசிக்க வைக்கப்பட்டுள்ளன. பெருந்திரளான மக்கள் இவற்றை வாசித்து வருகின்றனர். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் பயன்பெறும் பல விவரங்கள் இந்த வெளியீட்டில் காணப்படுகின்றன. (ப-28)


**ஞானக்குழந்தை கல்விக் கழகம்**
சிவன் வீதி, திருநெல்வேலி.

*✱ தரம் 5 புலமைப்பரிசில் வகுப்பு புதன்கிழமை 11.10.2006 3.30 p.m.*
*✱ தரம் 1-4 வரை வகுப்பு திங்கட்கிழமை 09.10.2006 3.30 p.m.*
[illegible]
இயக்குநர்.


# குப்பி விளக்குச் சரிந்ததில் முழுவீடும் எரிந்து நாசம்

மேசைமீது வைக்கப்பட்டிருந்த குப்பி விளக்கு சரிந்து தீப்பற்றிக் கொண்டதாகக் கூறப்பட்ட சம்பவத்தில் வீடொன்று முழுமையாக எரிந்து சாம்பரானது. இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் சாவகச்சேரி கச்சாய் வீதி, உருத்திரபுரம் பிள்ளையார் கோயில் வீதியில் இடம்பெற்றது.

இரவு பலத்த காற்று வீசியதால் வீடு முழுவதும் தீப்பற்றிக் கொண்ட போதிலும் வீட்டினுள் படுத்திருந்த 4 மாதக் குழந்தை உட்பட ஐந்து பிள்ளைகளும் பெற்றோரும் மயிரிழையில் தப்பியதாகத் தெரிவிக்கப்பட்டது. வீட்டிலிருந்த அனைத்துப் பொருள்களும் எரிந்து சாம்பராகியது. (ப)

# ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 13 - 03 - 1955



விண்ணில் 20 - 09 - 2005

## திருமதி சரஸ்வதி குணலிங்கம்

திதி: 09.10.2006 (திங்கட்கிழமை)

மறைந்ததோ ஓராண்டு
மறையாமல் இருப்பதோ - உன்
மறவன் ஊர் முகமம்மா
கொல்லங்கலட்டிதனில் கந்தரோடையிலும்
புன்முறுவல் பூத்த திருமுகமம்மா
ஜேர்மனி சென்று உன்முகம்
வாடியதேனம்மா? உன்
பாசங்கள் மறைந்ததேனம்மா
*ஓம் சாந்தி! சாந்தி!!சாந்தி!!!*

*நிரந்தர முகவரி:*
மறவன்புலோ,
சாவகச்சேரி.
*தற்காலிக முகவரி:*
ஆறுமுகம் வீதி, கந்தரோடை,
சுன்னாகம்.

(54246)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# இராணுவ வழியா? அமைதிப் பாதையா? தீர்மானிக்க வேண்டிய கட்டத்தில் அரசு

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் அனுசரணைத் தரப்பான நோர்வேயின் சலியாத எத்தனம் காரணமாக இந்த மாத இறுதியில் 'நிபந்தனை எதுவுமின்றி' நேரடிப் பேச்சை நடத்துவதற்கு இலங்கை அரசும், விடுதலைப் புலிகள் தரப்பும் இணங்கி உள்ளன.

இது நல்ல சேதிதான்.

ஆனாலும், இணக்கம் காணப்பட்ட பேச்சுத் திகதிக்கு இருபது நாள்கள் இருந்தும், உத்தேசப் பேச்சுக்கான வாய்ப்புக் குறித்து அவநம்பிக்கை நிலையே நிலவுகின்றது. அறிவிக்கப்பட்டபடி அந்தப் பேச்சு நடைபெறுவது குறித்து பலரும் சந்தேகம் கிளப்புகின்றனர்.

தரப்புகளுக்கு இடையில் நிலவும் முரண்பாடுகளும், நெருக்கடிகளும், இழுபறிகளும், மாற்ற முடியாத பகையுறவுப் போக்கும் அத்தகைய நம்பிக்கையீனத்தையே தருகின்றன.

ஒருபுறம் பேச்சுக் குறித்துப் பேசப்பட்டாலும் மறுபுறம் யுத்த ஆயத்தங்கள் முழு முனைப்பாக இடம்பெறுவதை உணர முடிகின்றது. நாடறியும் இந்த ஆயத்தங்கள், ஏற்பாடுகள் எல்லாம் பேச்சுக்கான வாய்ப்பை முழுமையாகக் கபளீகரம் பண்ணிவிடும் போலவே தோற்றுகின்றன.

யாழ். குடாநாட்டில் தென்மராட்சி, வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் பெரும் படை நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு அரசுப் படைகள் தயாராகி வருகின்றன என்றும் -

முகமாலை முன்னரங்கப் பகுதியில் படைகள் குவிக்கப்பட்டுத் தாக்குதலுக்கான ஏற்பாடுகள் நடக்கின்றன என்றும்-

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் விடுதலைப் புலிகள் முறைப்பாடு செய்திருக்கின்றனர்.

அதேசமயம், இலங்கை அரசுப்படைகள் தாக்குதல்களை நிறுத்திக்கொள்ளாவிட்டால் சமாதானப் பேச்சுக்குச் செல்வது என்ற தங்களின் முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டிய துர்ப்பாக்கியமான கட்டாயம் தங்களுக்கு ஏற்படும் என்பதைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கடந்த வெள்ளியிரவு அவசரக் கடிதம் மூலம் நோர்வேயின் விசேட தூதுவர் ஹன்ஸன் போவருக்கு அறிவித்திருக்கின்றார்.

புலிகளின் பாதுகாப்புச் சபை கூடி, களநிலைமைகள் குறித்து விரிவாக ஆராய்ந்த பின்னர் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

தவிரவும், உத்தேசப் பேச்சுக்கு முன்னர் ஆனையிறவை மீளக் கைப்பற்றி விடும் எண்ணம் இலங்கை அரசுக்கு இருப்பதை கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைகளில் இராணுவ, அரசியல் ஆய்வாளர்கள் கோடி காட்டியிருக்கின்றார்கள்.

இவற்றையெல்லாம் நோக்கும்போது அறிவிக்கப்பட்டபடி அமைதிப் பேச்சுகள் நடைபெறுமா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது என்பதை உணர முடிகின்றது.

இலங்கை அரசையும், விடுதலைப் புலிகளையும் எப்படியேனும் பேச்சு மேசைக்குக் கூட்டிவந்து இருத்தி, அமைதித் தீர்வுக்கு வழிபண்ண வேண்டும் என்பதில் மிகமிக உறுதியாக இருக்கும் சர்வதேச சமூகம், இரு தரப்புகளும் பேச்சு மேசைக்கு வருவதில் இப்போது ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகள் குறித்து அதிகம் கவனத்தில் எடுத்திருக்கின்றது.

பேச்சு மேசைக்கு இரு தரப்பையும் கூட்டி வரும் தமது சலியா முயற்சியின் ஒரு கட்டமாக, இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத் தலைமைகள் மூலம் தனது கருத்தை இலங்கை அரசுக்கு உறைப்பாக எடுத்துரைக்க சர்வதேச சமூகம் தீர்மானித்திருப்பதாகவும் தெரிகின்றது.

இவ்விவகாரம் தொடர்பாக இணைத்தலைமை அமைப்புகளின் கொழும்புக்கான தூதுவர்கள் இன்று, இலங்கை அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை இதற்காகக் கொழும்பில் சந்திக்கின்றனர்.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்த இலங்கை அரசு இணங்கினாலும் நாட்டின் ஒற்றுமையையும், இறைமையையும், ஆட்புல ஒருமைப்பாட்டையும் பேணும் நடவடிக்கையாகவும், புலிகளின் வலிந்த தாக்குதல்களை முறியடிக்கும் வகையிலும் பதில் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தனது உரிமையை அரசு கொண்டிருக்கின்றது என, அடுத்த சுற்று அமைதிப் பேச்சுக்கான ஏற்பாடுகள் குறித்து பிரகடனப்படுத்தப்பட்ட பின்னரும் இலங்கை அரசுத் தலைமையும், அதன் பேச்சாளர்களும் அறிவித்து வருகின்றனர்.

பதிலடி நடவடிக்கை என்ற பெயரில் இராணுவச் செயற்பாட்டு முஸ்தீபோடு அரசுத் தரப்பு இருக்குமானால் அமைதிப் பேச்சு ஏற்பாடுகள் பயனற்றவையாகப் போய்விடும் என்பதை இன்றைய சந்திப்பின்போது இணைத் தலைமைகளின் கொழும்புத் தூதுவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு விளக்கமாக எடுத்துரைப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சர்வதேச சமூகத்தின் அந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்டு, தனது போர் முனைப்பைக் கைவிட்டு, அமைதி முயற்சிகளின்பால் தனது ஈடுபாட்டை இலங்கை அரசு திருப்புமானால், இந்த மாத இறுதியில் நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கும் அமைதிப் பேச்சுக்கள் ஆரோக்கியமான - ஆக்கபூர்வமான - திசையை நோக்கித் திரும்பும் என எதிர்பார்க்கலாம்.

அப்படியில்லாமல், சர்வதேச சமூகத்தின் ஆலோசனையைப் புறந்தள்ளி, தனது இராணுவத் திட்ட முனைப்பை முழு அளவில் செயற்படுத்த அரசுத் தலைமை தீர்மானிக்குமானால், மாத இறுதி அமைதிப் பேச்சு சாத்தியமற்றதாகப் போய்விடவும் ஏதுநிலை உண்டு.

தென்னிலங்கையில் ஆளும் கட்சியும், பிரதான எதிர்க்கட்சியும் அரசியல் ரீதியாக நெருங்கிவரும் ஆக்கபூர்வ சூழல் தென்படுகின்றது. இத்தகைய நிலைமை அரசின் அரசியல் ஸ்திரத்தை மேலும் வலுப்படுத்தும்.

இந்த வலிமை நிலையைப் பயன்படுத்தி, இராணுவ செயல் திட்டத்தின் பக்கம் அரசு தனது போக்கைத் திருப்புமா? அல்லது அமைதி முயற்சிகளின் பால் ஈடுபாடு காட்டுமா?

அடுத்து வரும் வாரங்களில் இதற்கும் பதில் தெரிந்து விடும்.



செஞ்சோலை மீதான தாக்குதலில் படுகாயமடைந்து கண்டிக்கு சிகிச்சைக்கு கொண்டுசெல்லப்பட்ட நிலையில் மரணமான தம்பிமுத்து தயாளினி என்ற மாணவியின் பூதவுடல் அவரது சொந்த இடமான வன்னிக்கு நேற்று கொண்டு வரப்பட்டது. பூதவுடலைத் தாங்கிய செஞ்சிலுவைக் குழுவின் வர்கனத்தையும், பூதவுடலுக்கு விசுவமடு மகாவித்தியாலய மாணவிகள் அஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

# வாகரையை முழுமையாக கைப்பற்றும் நோக்கத்துடனேயே படைகள் தாக்கின!

## கைதான சிப்பாய் கூறினார் என்று இளந்திரையன் தகவல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வாகரைப் பிரதேசத்தை முழுமையாகக் கைப்பற்றி ஆக்கிரமிக்கும் நோக்குடனேயே இராணுவத்தினர் தமது தாக்குதலைத் தொடங்கினார்கள் என இத்தாக்குதலின்போது புலிகளிடம் சிக்கிய படைச் சிப்பாய் கூறினார் என்று புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இளந்திரையன் மேலும் தெரிவித்ததாவது:-

வாகரை பனிச்சங்கேணியில் பலியான படையினரின் சடலங்களைப் பெற அரசு மறுத்துவந்த நிலையில் பின்னர் படையினரின் உறவினர்களின் அழுத்தங்கள் காரணமாகவே சடலங்களைப் பெற அரசு சம்மதித்தது.

படையினரின் பனிச்சங்கேணி நோக்கிய வலிந்த தாக்குதல் வாகரையை ஆக்கிரமிக்கும் நோக்கிலேயே மேற்கொள்ளப்பட்டதென கைதுசெய்யப்பட்ட படைச் சிப்பாய் தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட படைச்சிப்பாய் கூறுகின்ற கருத்தின்படி அவர்கள் வாகரையைக் கைப்பற்றும் நோக்குடனேயே மும்முனைத்தாக்குதல்களை ஆரம்பித்திருக்கிறார்கள்.

இந்தத் தாக்குதலில் சிறப்புப் படைகள்,ஒட்டுப்படைகள், கடற்படை, வான் படை மற்றும் எறிகணைத் தாக்குதல்களின் உதவியோடு பாரிய முன்னேற்ற முயற்சி நடைபெற்றிருக்கின்றது.

இதேவேளை, இறந்த உடல்களை அடையாளம் காட்டி இவர்கள் படையினர், ஒட்டுக்குழுவினர் என காட்டியுள்ளனர். இந்த உடல்களை அரசிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொண்ட போதும் அவர்கள் இப்படி ஒரு சம்பவம் இடம்பெறவில்லையென ஆரம்பத்தில் மறுத்துவிட்டார்கள். பின்னர் இறந்தவர்களது உறவினர்களின் அழுத்தம் காரணமாகவே மீண்டும் அந்த உடல்களைப்பெறுவதற்கு அவர்கள் சம்மதித்துள்ளனர் - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சிறுவர் தினத்தையொட்டி தென்னம்பிள்ளை நடுகை

தென்மராட்சி,ஒக்.9

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி சாவகச்சேரி கச்சாய் வீதி உதயசூரியன் முன்பள்ளியினர் முன்பள்ளி சுற்றாடலில் பத்துக்கு மேற்பட்ட தென்னம்பிள்ளைகளை நட்டுள்ளனர்.

கடந்த முதலாம் திகதி முன்பள்ளியினரால் நடத்தப்பட்ட சிறுவர் தின நிகழ்வில் முன்பள்ளிச் சிறார்களால் தென்னம்பிள்ளைகள் நடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## மன்னார் தாழ்வுப்பாடு கடற்கரையில் கரையொதுங்கிய இழுவைப்படகு

மன்னார்,ஒக்.9

சுமார் 70 லட்சம் ரூபா பெறுமதியான இழுவைப்படகொன்று தாழ்வுப்பாடு கடற்கரையில் கரையொதுங்கியுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலைவேளையே இந்தப் படகு கரையொதுங்கியுள்ளது. ஆழ்கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் இழுவைப் படகே இன்று அதிகாலை மன்னார் தாழ்வுப்பாடு கடற்கரையில் கரையொதுங்கியுள்ளது.

ஆட்கள் எவரும் இல்லாத நிலையில் கரையொதுங்கிய படகு கற்பிட்டி பகுதி மீனவர்களுடையதாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது. குறித்த படகில் பயணம்செய்த மீனவர்கள் என்ன ஆனார்கள் என்பது பற்றி எதுவும் தெரியவில்லை. (க)

## கிழக்குப் பல்கலை. பீடாதிபதி பாலசுகுமாரை மனிதாபிமான அடிப்படையில் விடுவியுங்கள்!

### அமைச்சர் அமீர் அலி கோரிக்கை

கொழும்பு,ஒக.9

கிழக்குப் பல்கலைக்கழகப் பீடாதிபதி பாலசுகுமாரை கடத்திச் சென்றவர்கள் யாராக இருந்தாலும் மனிதாபிமான அடிப்படையில் அவரை விடுதலை செய்ய வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சருமான எம்.எஸ்.எஸ்.அமீர் அலி இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆழிப் பேரலை அனர்த்தத்தால் தமது மகளை இழந்து தவிக்கும் இவ்வேளையில் பீடாதிபதி பாலசுகுமார் கடத்தப்பட்டமை வருத்தத்துக்குரியது. மாணவர்களின் கல்வியில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்ட வேளையில் இந்த துன்பியல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கல்வியுடன் சம்பந்தப்பட்டவர்களைக் கடத்திக்கொண்டு செல்லும் நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும் - என்று அதில் உள்ளது. (202)

## மஹிந்த - ரணில் புதனன்று சந்திப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், பிராதன எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியத் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே நாளை மறுதினம் புதன்கிழமை முக்கிய சந்திப்பு நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பில் இரு கட்சிகளிடையேயான தேசிய பொது செயற்திட்டம் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

தற்போது சிங்கப்பூரில் உள்ள ரணில் விக்கிரமசிங்க நாளை செவ்வாய்க்கிழமை நாடு திரும்புகிறார்.

## பணிக் கொடுப்பனவு வழங்கப்படாதது குறித்து விவரம் கோரப்பட்டுள்ளது

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் வட பகுதி சாலைகளில் பணியாற்றி ஓய்வுபெற்ற ஊழியர்களுக்குரிய பணிக்காலக் கொடுப்பனவு வழங்கப்படாமை குறித்து ஜனாதிபதியின் செயலாளரினால் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபைத் தலைவரிடம் இருந்து விவரம் கேட்கப்பட்டுள்ளது. மேற்படி கொடுப்பனவு வழங்கப்படாதது குறித்து வட பிராந்திய ஓய்வுபெற்ற ஊழியர் நலன்புரிச் சங்க செயலாளர் அண்மையில் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இதனையடுத்து ஜனாதிபதியின் செயலாளர் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபைத் தலைவரிடம் இருந்து தகவல்களைக் கோரியுள்ளார். இக் கடிதத்தின் பிரதி மேற்படி நலன்புரிச் சங்க செயலாளருக்கும் அனுப்பப்பட்டது. சம்பந்தப் [illegible] 2004 [illegible] மாதத்திலிருந்து பணிக்கால கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (122)

## திருநெல்வேலி தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழப்பு

### ஊடக மத்திய நிலையம் அறிவிப்பு

கொழும்பு,ஒக்.9

திருநெல்வேலி-கல்வியங்காடுப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாக தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

சம்பவதினமிரவு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த படையினரை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் -

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த சிப்பாய் உடனடியாக பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவரது உயிர் பிரிந்துவிட்டது என்றும் - ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

இதற்கிடையில் - மீசாலையிலும் நேற்று முன்தினம் படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் - இதில் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

## தென்மராட்சியில் இன்று கால்நடை தீவனம் பங்கீடு

தென்மராட்சி,ஒக்.9

தென்மராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கு இன்று தொடக்கம் கால்நடை தீவனம் வழங்கப்படவுள்ளது.

சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகத்திற்கு குறைந்த அளவு கால்நடை தீவனம் வந்துள்ளதால் சங்க அங்கத்தவர்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுவார்த்தை ஆரம்பமாவதற்கு முன்னர் அற்ப விடயங்களை விவாதிப்பதை நிறுத்துக

## கொழும்புப் பேராயர் டுலீப் டி.சிக்கேரா வலியுறுத்து



கொழும்பு, ஒக் 9 பேச்சுகள் ஆரம்பமாவதற்கு முன்னர் அற்ப விடயங்களை விவாதிப்பதை தவிர்க்குக. இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் கொழும்பு பேராயர் அதிவண டுலீப் டி. சிக்கேரா.

இது விடயமாக அவர் நீண்ட அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

விரைவில் நடைபெறவுள்ள பேச்சுகள் மிகுந்த கருத்தாளத்துடன் கையாளப்பட வேண்டும். அத்துடன், அமைதி நிலை குறித்து உறுதி தளரா - அர்ப்பணம் நிறைந்த தன்னடக்கமானவர்கள் பேச்சுகளில் கலந்து கொள்ள வேண்டும்.

விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் நடைபெறும் சகல கொலைகளையும், ஆள்கடத்தல்களையும் நிறுத்த உடனடி- தெட்டத் தெளிவான நடவடிக்கை எடுக்குமாறு மோசமான இந்தச் சூழ்நிலையில் இலங்கை அரசைக் கேட்கின்றேன்.

சகல கொடுமையான சம்பவங்கள் குறித்தும் விசாரணை செய்ய சுயாதீன ஆணைக் குழு ஒன்றை நியமிக்க உடனடியாக ஏற்பாடு செய்யுமாறும் இலங்கை அரசிடம் கோருகின்றேன்.

பாடசாலை நடைமுறைகள், மனித நலப்பற்றுடைய உதவிகள், கொலைகளும், ஆள்கடத்தல்களும் அரசியல் தலைவர்களின் அக்கறையற்ற நிலை என்ற பல்வேறு உபவிடயங்களை உள்ளடக்கியதாக பேராயரின் அறிக்கை வெளியாகியுள்ளது.

*(பேராயர் விடுத்துள்ள அறிக்கையின் முழுவிவரமும் பின்னர் வெளியாகும்.)*

### கல்வி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாணவர்களை விழித்து மக்கள் குழு விடுத்துள்ள வேண்டுதலில் குறிப்பிடப்பட்டுள் ளதாவது:-

அன்பான யாழ். மாணவர்களுக்கு,

கடந்த ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதிக்குப் பின்னர் இதுவரை யாழ்.குடாநாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக கல்விச் செயற்பாடுகள் முடங்கிக் கிடந்ததுடன் நீங்களும் பாடசாலைக்குச் செல்லவில்லை.

நீங்கள் குறிப்பிட்ட குறைபாடுகளைக் கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கும் தணிப்பதற்குமான முயற்சிகளைச் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு பல வழிகளிலும் முன்னெடுக்கின்றது.

ஆகவே, பொன்னான காலத்தை வீண் போகவிடாது 09.10.2006 ஆம் திகதி திங்கட்கிழமையில் இருந்து பாடசாலைக்கு செல்வதற்கு எடுத்திருக்கும் தீர்மானம் வரவேற்கத்தக்கது. பல்வேறு கல்விச் செயற்பாடுகளும் தடையின்றி நடைபெற வேண்டுமென கேட்கின்றோம்- என்றுள்ளது.

### 11 சிப்பாய்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் புதைத்தனர்.

நேற்று இச்சடலங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கையளிக்கப்பட்டன.

இதேவேளை - வாகரையில் சண்டை நடைபெற்ற பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது மேலும் மூன்று சடலங்கள் மீட்கப்பட்டன என்றும் -

மொத்தமாக மீட்கப்பட்ட 14 சடலங்களில் ஆறு துணை இராணுவக் குழுவினருடையது என்பதால் இராணுவத்தினரது 11 சடலங்களும் மட்டுமே ஞாயிற்றுக்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகளால் கையளிக்கப்பட்டுள்ளன எனவும் - புலிகள் தெரிவித்தனர். (ஐ-12)

### முகமாலை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகமாலை முன்னரங்கப் பகுதி ஊடாக இராணுவத்தினர் பாரிய அளவிலான இராணுவ நகர்வு முயற்சியை ஞாயிற்றுக்கிழ[illegible] காலை 6.30 மணியளவில் மேற்கொண்ட[illegible]

இதையடுத்து தமிழீழ விடுதலைப் புலிகள் கடும் பதில் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் இராணுவத்தைச் சேர்ந்த ஐந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் நால்வரின் சடலங்களை இராணுவத்தினர் தூக்கிக் கொண்டு ஓடியதாக களமுனைப் போராளிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் இராணுவத்தினரின் ரி-56-2 ரகத் துப்பாக்கிகள் மூன்று, ரவைக் கூடுகள் மூன்று, தலைக்கவசங்கள் இரண்டு உட்பட்ட இராணுவத் தளபாடங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

இத்தாக்குதலில் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் எந்தவித இழப்புகளும் ஏற்படவில்லை - என்று புலிகளின் இராணுவப் பேச்சாளர் தெரிவித்திருக்கிறார்.

இதனிடையே -

முகமாலையில் படைகள் குவிக்கப்பட்டு பெரும் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்க அரசுப் படைகள் தயாராகி வருகின்றன என்று விடுதலைப் புலிகள் வெளியிட்டிருக்கும் குற்றச்சாட்டை இராணுவத் தரப்பு மறுத்திருக்கிறது.

முகமாலையில், தாக்கினால் திருப்பித் தாக்கும் நடவடிக்கைகளில் மட்டுமே படையினர் ஈடுபட்டுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார். (ஐ-12)

### பொத்துவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டம் நடத்தியமை தெரிந்ததே. விசேட அதிரடிப்படையினரை அப்புறப்படுத்தும்படி அங்கு சென்ற அமைச்சர்களிடமும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பியிடமும் மக்கள் முறைப்பாடும் செய்திருந்தனர். இதையடுத்து அதிரடிப் படையினர் அங்கிருந்து வாபஸ் பெறப்பட்டனர்.

இருந்தும் கடந்த வாரம் முதல் விசேட அதிரடிப்படையினர் அங்கு மீண்டும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார். (த)

### அம்பாறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்தார்.

அதிரடிப்படையினரின் இந்த ஷெல் வீச்சை அடுத்து பல குடும்பங்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளன.

சனிக்கிழமை இரவும் விடுதலைப் புலிகளின் நிர்வாக எல்லைப்பகுதிகளில் உள்ள பொதுமக்கள் குடியிருப்புகள் மீது ஷெல் வீச்சு நடத்தப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

### முஸ்லிம் காங்கிரஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போன்றவை பற்றிக் கலந்துரையாடவென ஒஸ்லோவுக்கு வருமாறு நோர்வேயின் சர்வதேச விவகாரங்களுக்கான அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம், மு.காவின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார். அதற்கு அமையவே இவ்விஜயம் மேற்கொள்ளப்படவுள்ளதாக மு.கா வின் செயலாளர் நாயகம் எம்.ரி. ஹஸன் அலி நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

### ஐ.நா. பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோபி அனானின் பதவிக் காலம் முடிவடைகிறது. இதையடுத்து நடைபெறும் ஐ.நா., பொதுச்செயலர் தேர்தலில் தென் கொரிய வெளியுறவு அமைச்சர் பான்- கி-மூன், இந்தியா சார்பில் சசி தரூர் மற்றும் இலங்கை சார்பில் ஜயந்த தனபால உட்பட ஏழு பேர் போட்டியிட முடிவு செய்தனர். ஆனால், தொடர்ந்து நடந்த நான்கு முன்னோடி தேர்தல்களில் வெற்றி வாய்ப்பு இல்லாததால் இந்தியாவைச் சேர்ந்த சசி தரூர் மற்றும் இலங்கை ஜயந்த தனபால உட்பட ஐந்து பேர் போட்டியில் இருந்து விலகியமை தெரிந்ததே. (ஐ)


எம்முடன் இணைவோர் உயர் கல்வி பெறுவது நிச்சயம்.

**விக்னா கல்வி நிறுவனம்**

52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

**A/L DAY CLASS**

**கலை, வர்த்தக வகுப்புகள்**

ஆரம்பம் :- 12.10.2006 8 மணி

| | |
|---|---|
| Eco. B.கஜீதரன் | ACC. P.பகீரதன் |
| B.ST பாசோ | LOG. காமல் |
| TAM. குழந்தை | H/Calu. N.T.தரன் |
| Geo. பாபு | HIST. பத்மன் |
| Chri வசந்தன் | DRAMA ரமேஷ் |
| Po/Sci றொபின்சன் | ENGL. S.விஸ்வநாதன் |

இன்றிலிருந்து அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.


### வடக்கில் பாரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து வன்முறைகளையும் இருதரப்பினரும் கைவிட வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தது.

மேலும் போரின் மூலமாக வடக்கு - கிழக்கின் அரசியல் சவால்கள் தீர்க்கப்பட முடியாது என்றும், தமிழீழ விடுதலைப் புலிகள் அனைத்து பயங்கரவாத செயற்பாடுகளை கைவிட்டுவிட்டு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகாண்பதற்கான சமரசமான நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும் என்றும், யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை ஸ்ரீலங்கா இராணுவம் மதித்து நடப்பதை ஸ்ரீலங்கா அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிக்கை வெளியிடப்பட்டது முதல் தமிழீழ விடுதலைப் புலிகள் சாதகமான இணக்கப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றனர். பேச்சுக்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கான அனைத்து வன்முறைகளையும் கைவிட்டுள்ளனர்.

இந்த நிலையில் ஒக்டோபர் 6ஆம் திகதி கிழக்கு மாகாணத்தில் வாகரையில் விடுதலைப் புலிகளின் பகுதிகளை ஆக்கிரமிக்க ஸ்ரீலங்கா இராணுவத்தினர் வலிந்த தாக்குதலை மேற்கொண்டதுடன் வான் குண்டுத் தாக்குதலையும் நடத்தினர்.

மேலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் பகுதிகளை நோக்கி ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பாரிய வலிந்த தாக்குதல்களைக் குறிப்பாக வடபகுதியில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்குத் தெரியவந்துள்ளது. இத்தகைய வலிந்த தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் அது ஒரு முழு அளவிலான யுத்தமாக வெடிக்கக்கூடும்.

ஆகையால் அனைத்து இராணுவ நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா அரசு கைவிட்டு விட்டு பேச்சுகளை மீளத் தொடங்குவதற்கான ஏதுவான சூழ்நிலையை உருவாக்க சர்வதேச சமூகம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறோம்- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அரசு-புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிட்டிருக்கிறார்.

விடுதலைப்புலிகளும் அரசுத்தரப்பும் இம்மாத இறுதியில் சமாதானப் பேச்சை நடத்துவதற்கு இணக்கம் தெரிவித்திருப்பதை அடுத்தே ஜப்பானின் விசேட தூதர் தனது இலங்கைப் பயணத்தைத் திட்டமிட்டிருக் கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் அகாஷி கடந்தமாத ஆரம்பத்தில் இலங்கை வர இருந்தார். எனினும் அப்போது அகாஷியைச் சந்திப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரிடமிருந்து சாதகமான பதில் கிடைக்காத காரணத்தால் அவர் தனது பயணத்தைக் கைவிட்டிருந்தார்.

அண்மைக்கால மோதல்களால் வடக்கு - கிழக்கில் ஆயிரக்கணக்கில் மக்கள் இடம்பெயர்ந்தும் ஏராளமானோர் கொல்லப்பட்டும் உள்ள நிலையில் பாதிக்கப்பட்ட இந்த சிறுபான்மை இன மக்களுக்கு ஜப்பானின் உதவிகளை வழங்குவது தொடர்பாக அரசுத் தரப்புடனும், விடுதலைப் புலிகளுடனும் அகாஷி பேச்சு நடத்தவுள்ளார் என்றும் -

தற்போது சமாதானப் பேச்சுக்கு இணங்கியுள்ள நிலையில் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அகாஷியை சந்திப்பதற்கு இணங்கக்கூடும் என்று ஜப்பான் எதிர்பார்ப்பதாகவும் -

ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன. (ஐ)

### மகாறம்பைக் குளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடையாளம் காண்பதற்காக வவுனியா வைத்தியசாலையில் அந்த இரு இளைஞர்களின் சடலங்களும் வைக்கப்பட்டுள்ளன. எனினும், நேற்று மாலை வரை இச்சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை என்று வவுனியாவிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (த)

## இணைத் தலைமைகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தெரிகின்றது.

அமைதிப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கும் முயற்சியாக நோர்வேயின் விசேட தூதுவர் ஹன்ஸன் போவர் கடந்த வாரம் இலங்கைக்கு வந்திருந்தார். சம்பந்தப்பட்ட தரப்புகளோடு விரிவான பேச்சுகளில் அவர் ஈடுபட்டார். தமது இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு புதுடில்லி வழியாக ஒஸ்லோ திரும்புவதற்கு முன்னர், கடந்த வியாழனன்று கொழும்பில் இணைத் தலைமைகளின் தூதர்களை போவர் சந்தித்திருந்தார். இலங்கை அரசு மற்றும் புலிகள் ஆகிய தரப்புகளோடும், ஏனையோருடனும் தாம் நடத்திய கலந்துரையாடல்களின் பெறுபேறுகளை அப்போது இணைத் தலைமைகளின் கொழும்புத் தூதுவர்களுக்கு போவர் விளக்கினார் என்று தெரிகின்றது.

அதையடுத்தே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஒன்றாகச் சந்தித்துப் பேசுவதற்கு இணைத் தலைமைகளின் கொழும்புத் தூதுவர்கள் தீர்மானித்திருந்தார்கள் என்றும் கூறப்படுகின்றது.

அந்தத் தீர்மானத்தின் படியான சந்திப்பே இன்று இடம்பெறுகின்றது.

கடந்த புதனன்று நோர்வே விசேட தூதுவர் போவர், இலங்கையின் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவைச் சந்தித்துப் பேசியிருந்தார்.

அப்போது -

யுத்த நிறுத்த உடன்பாடு எப்படியிருந்தாலும், புலிகளின் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான முன்னேற்பாடாகத் தற்காப்புத் தாக்குதல்களை அரசுப் படைகள் தொடரும் என்று இலங்கை இராணுவத் தளபதி நோர்வேயின் விசேட தூதுவரிடம் திட்ட வட்டமாகத் தெரிவித்திருந்தார் எனக் கூறப்படுகின்றது.

இந்த விவகாரம் குறித்தே இணைத் தலைமைகளின் கொழும்புத் தூதுவர்கள் இன்றைய சந்திப்பின்போது முக்கியமாகக் கவனம் செலுத்துவர் என்று நம்பப்படுகின்றது.

தாக்குதல் நடவடிக்கைகளில் முனைப்புக் காட்டுவது அமைதி முயற்சிகளைத் தடம்புரள வைத்து விடும் எனத் தூதுவர்கள் நால்வரும் இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்துவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மனித உரிமை மீறல்கள் மற்றும் வன்முறைகள், ஆட்கடத்தல்கள், படுகொலைகள் போன்ற விவகாரங்கள் தொடர்பான பிரச்சினைகளில் சர்வதேசப் பங்களிப்பு, இடம்பெயர்ந்தோரின் மனிதாபிமானப் பிரச்சினைகளை விரைந்து தீர்த்தல் போன்ற விடயங்கள் குறித்தும் அவர்கள் ஜனாதிபதியிடம் விளக்கங்களைப் பெற்றுக் கொள்வர் என்று தெரிகின்றது. (உ)


**CHEMISTRY (Group Class)**

**2008 A\L**

* வெப்ப இரசாயனம்
* ஒட்சியேற்றமும் தாழ்த்தலும்

Wed. 4.00 11.10.2006

DIAS B.sc (Hons)

College of Chemistry

பழம் றோட், கந்தர்மடம்.


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி தியாகராஜா

**(முன்னாள் அதிபர் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி சுன்னாகம், கல்வி அதிகாரி - முல்லைத்தீவு/யாழ்ப்பாணம், பணிப்பாளர்- யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகு, உப தலைவர் - யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்)**



வேதராணியார் வளவு, உடுவில் கிழக்கு, பெரிய மதவடியைப் பிறப்பிடமாகவும், 34, முருகேசர் வீதி நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தியாகராஜா 08.10.2006 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ரகுசகிப் (**Raoshaib**), **M.C.**தம்பி, கண்மணியம்மா ஆகியோரின் பாசமிகு புதல்வனும் திரு திருமதி நவரட்ணராஜாவின் மருமகனும், திருமதி யசோதரா தியாகராஜா (இளைப்பாறிய அதிபர், மானிப்பாய் மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும் ராகுலனின் (கணக்காளர் **Austrelia**) பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான திருமதி ஜெயலட்சுமி திருநாவுக்கரசு, ஜெய்சிங், சிவப்பிரகாசம் மற்றும் திருமதி குமாரசாமி சிவபாக்கியம் (இளைப்பாறிய ஆசிரியை யா/இராமநாதன் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி மாலதி ராகுலனின் (**Austrelia**) மாமனும் நிஷா, சயன் (**Austrelia**) ஆகியோரின் அன்புப் பேரனும் அமரர்களான **P.S.** குமாரசாமி, குணபூபதி மற்றும் உருத்திரன், நவரட்ணராஜா (**Ret. DGM-NSB**), திருமதி சுபத்திரா சிவநாயகம் (இளைப்பாறிய ஆசிரியை), திருமதி கௌசல்யா தெட்சணாமூர்த்தி (இளைப்பாறிய ஆசிரியை), திருமதி ராதா (லண்டன்), சிவகுமார் (இளைப்பாறிய அதிபர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் **Mahinda Parlour Mount-Lavenia** மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 10.10.2006 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் 5 மணியளவில் தகனஞ்செய்யப்படும்.

**No.5, 3/2, 42nd lane,**
**Colombo-06**
**T.P.:0112 362439**

**தகவல்:**
**யசோதரா தியாகராஜா (மனைவி)**
**தியாகராஜா ராகுலன் (மகன்)**

*இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.10.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org